பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 27 சனிக்கிழமை (12.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 257

# பலாலி பெருந்தளம் மீது நேற்றிரவு புலிகளின் விமானம் றொக்கட் வீச்சு!



## ஊடகங்களில் பரபரப்புத் தகவல்! அரச தரப்பு மௌனம்

கொழும்பு,ஓக.12

வடக்கு வானில் நேற்றிரவு 9.30 மணியளவில் திடீரெனச் சஞ்சரித்த அடையாளம் தெரியாத விமானம் ஒன்று பலாலி பெருந்தளத்தின் மீது ரொக்கட் தாக்குதலை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில் உள்ள சிவிலியன் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'தமிழ்நெற்' இணையத்தளம் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

குடாநாட்டுப் படைகளின் தலைமையகம் மற்றும் விமானத் தளத்தை உள்ளடக்கிய பலாலி பெருந்தளம் மீதே வான்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

நேற்று முகமாலை மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் மூண்ட சண்டையின்போது அந்தப் பிரதேசங்களை நோக்கி பல்குழல் ரொக்கெட்டுகளும், ஆட்டிலறி ஷெல்களும் ஏவப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பலாலி பெருந்தளம் விமானத்தாக்குதலுக்கு இலக்கானது என்று கூறப்படுகிறது. அடையாளம் தெரியாத விமானம் நடத்திய குண்டுத் தாக்குதலை அடுத்து பலாலி பெருந்தளம் மற்றும் அந்தப் பிரதேசத்தில் உள்ள ஆட்டிலறி நிலைகளிலிருந்து நடத்தப்பட்ட எறிகணை வீச்சுக்கள் சடுதியாக நிறுத்தப்பட்டன என்றும் 'தமிழ் நெற்' செய்தி தெரிவித்தது.

பலாலி பெருந்தளம்மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற தகவலை நேற்றிரவு பல்வேறு இணையச் செய்தித்தளங்களும் வெளியிட்டன. இதனால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் வான் புலிகளின் விமானம் ஒன்றே பலாலி பெருந்தளம் மீது பறந்து ரொக்கட் தாக்குதலை நடத்தியது என்று சில இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன. யுத்தத்தில் பெரும் திருப்பு முனையாகக் கருதத்தக்க இந்த வான் தாக்குதல் பற்றிய செய்தியை விடுதலைப் புலிகளின் வட்டாரங்களே அன்றி அரச மற்றும் இராணுவ உயர் மட்டத்தினரோ

(16 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலையில் மோதல் வெடித்தது!

## பல்குழல் மற்றும் ஆட்டிலறி ஷெல் வீச்சுகளால் அந்தப் பிரதேசம் அதிர்கிறது! மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 12

**வடக்கே முகமாலை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுத் துருப்பினருக்கும் இடையே கடும் சமர் மூண்டுள்ளது.**

**முகமாலையில் ஏ-9 வீதியூடாக பளைப் பிரதேசம் நோக்கி கடும் எறிகணை வீச்சுக்களை நடத்திக்கொண்டு படையினர் முன்னேற முயற்சிப்பதை அடுத்து அங்கு சண்டை மூண்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவிக்கின்றனர். ஆனால், இதனை மறுத்துரைத்துள்ள இராணுவத்தின் பேச்சாளர், படையினரின் நாகர்கோவில் முன்னரங்கப் பகுதி மீது விடுதலைப் புலிகளே ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவித்திருக்கிறார்.**

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பளைப் பகுதியை நோக்கி நேற்று மாலை 5.45 மணி முதல் அகோர ஷெல் மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலாலி பெருந்தளத்தில் இருந்தும் இந்தப் பிரதேசங்களை நோக்கி ஆட்டிலறி ஷெல்கள் ஏவப்பட்டன. ஷெல்கள் வானில் வெடித்துக் கிளம்பும் ஓசைகளை யாழ். நகரப் பகுதிகளிலும் கேட்கக் கூடியதாக இருந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு குறித்து உர்ஜிதம் இல்லை

யாழ்ப்பாணம்,ஓக.12

முகமாலைப் பகுதியில் அரசாங்க பாதுகாப்புப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை மோதல் வெடித்ததைத் தொடர்ந்து -

யாழ்.குடா நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக சில ஊடகங்களில் அறிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலில் கொடிகாமத்தில் மூவர் காயம்

கொடிகாமத்தில் நேற்று நள்ளிரவு ஷெல் தாக்குதலில் காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொடிகாமம் வெள்ளம் போக்கட்டியைச் சேர்ந்த கிரு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குண்டுவீச்சு!

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது நேற்று நண்பகல் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

விமானப்படையின் சண்டை விமானங்கள் தரவை, மியாங்குளம் மற்றும் இறால்குளம் பகுதிகளில் குண்டுகளை வீசித் தாக்கின என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஐந்து தடவைகளில் மொத்தம் 16 குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. இதனால், வீடுகள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தாயகத்தையும் மக்களையும் பாதுகாக்க முப்படைகளையும் பயன்படுத்துவோம்!

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

கிளிநொச்சி, ஓகஸ்ட் 12

"தமிழர்களின் தாயகத்தையும் மக்களையும் பாதுகாப்பதற்காக முப்படைகளையும் பயன்படுத்துவோம்."

- இவ்வாறு நேற்றிரவு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன்.

நேற்றுமாலை முகமாலை ஊடாக இராணுவத்தினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி முன்னேற்ற நடவடிக்கைகளை ஆரம்பித்தனர் என்ற தகவல்கள் வெளியானதன் பின்னர் - நேற்றிரவு - ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார் இளந்திரையன். அப்போது "எமது முப்படைகளையும் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவோம்" என்று குறிப்பிட்டிருந்தார் அவர். முகமாலையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## படைநிலைகளுக்கு அருகே வசிப்பவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு அறிவிப்பு!

கிளிநொச்சி,ஓக.12

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தென்மராட்சியில் படைமுகாம்களுக்கு அண்மையில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முகமாலைப் பகுதியில் இராணுவத்தினர் தாக்குதல்களுடன் நகர்வுகளை மேற்கொண்டு வருவதையடுத்தே பொதுமக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயருமாறு புலிகள் கேட்டிருக்கின்றனர்.

புலிகளின் இந்த வேண்டுகோள் அவர்களது அதிகாரபூர்வ வானொலி மூலமும் இணையத்தளங்கள் மூலமும் நேற்றுமாலை விடுக்கப்பட்டன. கிளாலி, புலோப்பளை, மந்துவில், எழுதுமட்டுவாள், வரணி, கச்சாய், மீசாலை, கொடிகாமம் உட்பட தென்மராட்சிப் பகுதிகளில் இராணுவ நிலைகளுக்கு அண்மையில் இருக்கும் மக்களையே பாது

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பளை, இயக்கச்சி மக்கள் பரந்தன் பகுதிக்கு இடம் பெயர்வு

பரந்தன், ஓக.12

நேற்று மாலையில் முகமாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்திலிருந்தும் பளை, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து பரந்தனை வந்தடைந்தனர்.

நேற்றிரவு 8 மணி வரை சுமார் ஐயாயிரம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தொண்டு நிறுவனப் பணியாளர் படுகொலையை கண்டித்து நகரில் நேற்று மௌனப் பேரணி


மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற மௌனப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக இருந்து புறப்படுவதை முதல் இரு படங்களிலும் பேரணியில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரஜைகளையும், பேரணியில் கலந்துகொண்டோர் யாழ்.செயலகத்தின் முன்பாக குழுமி நிற்பதையும் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் யாழ்.அரச அதிபரிடம் கண்டனத்தை தெரிவிப்பதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

யாழ்ப்பாணம்,ஓக.12

அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பதினேழு ஊழியர்கள் மூதூரில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் மௌனப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஒத்துழைப்புடன் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் யாழ்.கிளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தின் முன்பாக பிற்பகல் 2 மணிக்கு இந்தப் பேரணி ஆரம்பமானது.

இந்தப் பேரணி கோவில் வீதி வழியாக நகர்ந்து யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து ஏ-9 கண்டி வீதி வழியாக யாழ்.செயலகத்தை அடைந்தது.

இந்த மௌனப் பேரணியில் யாழ்.குடாநாட்டில் பணியாற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உயரதிகாரிகள் உட்படப் பணியாளர்கள் அனைவரும் தமது நிறுவனங்களை அடையாளப்படுத்தும் உடைகளை அணிந்தவாறு கலந்துகொண்டனர்.

நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்ட இப் பேரணியில் பெருமளவான வெளிநாட்டுப் பிரஜைகளும் பங்கு கொண்டனர்.

பேரணியில் சென்றோர் மூதூர் படுகொலைகளைக் கண்டிக்கும் பதாகைகளையும் படுகொலை செய்யப்பட்ட தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படங்களையும் வைத்திருந்தனர். படுகொலைகள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் சுலோகங்களும் பேரணியில் கலந்து கொண்டோரின் கைகளில் இருந்தன.

படுகொலை செய்யப்பட்ட 17 பேரின் படங்களும் பேரணியின் முன்னால் எடுத்து வரப்பட்டன.

மௌனமாக நடைபெற்ற இந்தப் பேரணி யாழ்.செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு பேரணியில் கலந்துகொண்டோர் தமது கண்டனத்தை அரச அதிபர் கே.கணேஷிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ்.அரச அதிபர் உரையாற்றினார். இவ்வாறான கண்மூடித்தனமான செயற்பாடுகள் கண்டிக்கப்படவேண்டியவை. இது மிகப் பாரதூரமான ஒரு செயல். இவ்வாறானதொரு சம்பவம் இனியும் இடம்பெறாமல் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆயினும் இந்தச் சம்பவத்தினால் சோர்ந்து போகாமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து தமது பணியை முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். ஏனெனில் நாம் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத்தான் பணியாற்றுகின்றோம் - என்று அரச அதிபர் தெரிவித்தார். (1-8-190)

## முகமாலை ஊடாக குடாநாட்டுக்குள் லொறிகள் வரப் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஓக.12

குடாநாட்டுக்கு முகமாலை சோதனை நிலையம் ஊடாக பொருள்கள் எடுத்துவரும் லொறிகளை அனுமதிப்பது தொடர்பாக புதிய நடைமுறை ஒன்று நேற்று அமுலுக்கு வந்துள்ளது.

ஓமந்தை சோதனை நிலையத்தைத் தாண்டும் ஒரு லொறி 24 மணி நேரத்துக்குள் முகமாலைச் சோதனை நிலையத்தை வந்தடைந்தால், அந்த லொறியில் உள்ள பொருள்கள் சோதனை செய்யப்பட்டு குடாநாட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படும் என்றும்-

24 மணி நேரத்துக்கு பின்னர் வரும் லொறி குடாநாட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படாது என்றும் -

அந்த லொறியில் எடுத்துவரப்படும் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் லொறி ஒன்றில் மாற்றப்பட்டு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் - படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருள்களை ஏற்றி வந்த லொறி யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை-

யாழ்ப்பாணம் நோக்கி நேற்று வந்த சுமார் 75 லொறிகள் முகமாலையில் சோதனை செய்யப்பட்ட பின் அங்கு தரித்து நிற்கின்றன என்றும்,

அந்த லொறிகளை இன்று காலையே யாழ்ப்பாணத்திற்கு வர அனுமதிக்க முடியும் எனப் படையினர் தெரிவித்தனர் என்றும் - லொறி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (1)

## போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்

இரு வேறு சம்பவங்களின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் பெயர் விவரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

04.08.2006 அன்று மூதூரில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்த லெப்.சிவரஞ்சன் (சுப்பிரமணியம் யோகேஸ்வரன், புளியங்கண்டல் வாகரை).

08.08.2006 மட்டு.குடும்பிமலைக் கோட்ட சந்திவெளியில் தேசத் துரோகிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரவேங்கை ரூபநாதன் (காத்தமுத்து ஜெயநாந்தன் - கண்ணகை அம்மன் கோயிலடி, சந்திவெளி, மட்டக்களப்பு) என்பவரும் வீரச்சாவடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-203)

## தொண்டர் ஆசிரியர் சந்திப்பு திங்களன்று

தொண்டராசிரியர்களது நிரந்தர நியமனம் தொடர்பாக நாளை மறுதினம் திங்கட்கிழமை முக்கியஸ்தர்களுடன் சந்திப்பொன்று நடத்தப்படவுள்ளது.

இச் சந்திப்பில் பங்குபற்றுவதற்காக அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் யாழ். கல்வி வலயத்திற்கு முன்பாக அன்றைய தினம் ஒன்றுகூடுமாறு யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

நேர்முகத் தேர்வுக்குச் சமர்ப்பித்த ஆவணங்களையும் கொண்டுவருமாறு அவர் கேட்டுள்ளார். (1-203)

## வர்த்தகர்களுக்கான அவசர சந்திப்பு

கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டு வரும் சகல வர்த்தக உரிமையாளர்கள், பொருள்களை ஏற்றி இறக்கும் லொறிகளின் உரிமையாளர்கள் ஆகியோருடனான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வணிகர்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து லொறி உரிமையாளர்களையும், வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு வணிகர் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

## வடமராட்சி கல்வி வலயத்தில் இன்று முதல் தமிழ்த்தின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.12

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட தமிழ் மொழித் திறன் போட்டிகள் இன்றும் நாளையும் எதிர்வரும் 16 ஆம் திகதியும் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இன்று -

பேச்சு (பிரிவு 4, 5), பாஓதல் (பிரிவு 4,5), இசை தனி (பிரிவு 4, 5), இசை குழு (பிரிவு I, II), நடனம் (பிரிவு 4, 5), நடனம் குழு (நாட்டிய நாடகம்), நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினா ஆகிய போட்டிகளும்.

நாளை வாசிப்பு (பிரிவு II), பேச்சு (பிரிவு 2,3), பாஓதல் ( பிரிவு 2, 3), இசை தனி (பிரிவு 3), நடனம் (பிரிவு 2,3), நடனம் குழு (பிரிவு 1) ஆகிய போட்டிகளும்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 16 ஆம் திகதி வாசிப்பு (பிரிவு 1), ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல் (பிரிவு 1), பேச்சு (பிரிவு 1), பாஓதல் (பிரிவு 1), இசையும் அசைவும் (பிரிவு 1), நடனம் தனி (பிரிவு 1) ஆகிய போட்டிகளும் - நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (1-117)

## மாணவர் கவனத்திற்கு

இன்று நடைபெறவுள்ள 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்கு இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் பதிவு செய்துள்ள மாணவர்கள் அதே பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான சுட்டெண்கள் பதிவு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் - மேலும் அவர் தெரிவித்துள்ளார். (1-203-405)

# யாழ். வலயப் பாடசாலைகள் நேற்றும் செயற்படவில்லை

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்தது. இதனால் யாழ். கல்வி வலயப்பாடசாலைகள் நேற்று முற்றாக செயலிழந்தன.

தமது கல்லூரிக்குச் சமீபமாக உள்ள இராணுவக் காவலரணை அகற்றுமாறு கோரி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்டு வரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே யாழ். கல்வி வலய மாணவர்களும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரி மாணவர்களும் தமது பாடசாலைக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரண், பொலிஸ் நிலையம் ஆகியவை அகற்றப்பட வேண்டுமெனக் கோரி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தமது கல்வி செயற்பாடுகளுக்கு இராணுவக் காவலரண்கள் தடையாக உள்ளமையால் அவை அகற்றப்படும் வரை தாம் தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்துள்ளதாக யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.

பகிஷ்கரிப்பையொட்டி நேற்றுக்காலை யாழ். நகரப் பாடசாலைகளில் சிலவற்றின் முன்னால் வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை -

ஏனைய வலயங்களின் பாடசாலைகள் நேற்று வழமைபோல நடைபெற்றன. (8-190-86)


யாழ். ஆஸ்பத்திரி, சுகாதாரத் திணைக்களம் முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவது ஈழத் தமிழருக்கு சமாதி கட்டும் வேலை

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக அவசர போராயுத உதவிகளை இந்தியாவிடம் கோரியிருக்கின்றதாம் இலங்கை.

இந்தியா வழங்கும் போராயுதங்கள் புலிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்படும்; தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படமாட்டா என்ற உறுதிமொழியுடன் தான் தனக்குத் தேவையான போராயுதங்களின் பட்டியல் ஒன்றைப் புதுடில்லிக்குச் சமர்ப்பித்திருக்கின்றது இலங்கை.

இப்போது புதுடில்லியின் பதிலுக்குக் கொழும்பு காத்திருக்கின்றது என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்த மேற்குலகம், அதற்கு மேல் புலிகளுக்கு எதிராக எதனையும் செய்யப் போவதில்லை என்ற விசனத்தில் குழம்பிப் போயிருக்கிறது. கொழும்பு நிர்வாகம். புலம்பெயர்ந்த தமிழர்கள் மூலம் மேற்குலகிலிருந்து விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கும் உதவிகளைக் கூடத் தடுத்து நிறுத்துவதில் அதிக சிரத்தை காட்டாத அந்த நாடுகள், தமக்கு ஆயுத மற்றும் இராணுவ உதவிகளை வழங்குவதிலும் மெத்தனப் போக்கிலேயே இருக்கின்றன என்று வெதும்புகின்றதாம் இலங்கை அரசு. இதனால்தான் இந்தியா பக்கம் அதன் கவனமும், நாட்டமும், சிரத்தையும் அதிகம் திரும்பியிருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

ஆனாலும், இலங்கை அரச படைகளின் இராணுவ நடவடிக்கை களினால் அப்பாவித் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுவதும், உயிர், உடல், உடைமைச் சேதங்களுக்கு உள்ளாக்கப்படுவதும் இந்தியாவில் பெரும் கொந்தளிப்பையும், சீற்றத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தும் விவகாரம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அத்தகைய நிலையில் இலங்கை அரசுப் படைகளுக்கு அவை கோரும் ஆயுதங்களை வழங்க புதுடில்லி நிர்வாகம் முன்வருமானால் அது தமிழகம் உட்பட இந்தியாவில் பல பகுதிகளிலும் பெரும் அரசியல் கிளர்ச்சிகளையும், மக்கள் கொந்தளிப்பையும் ஏற்படுத்தும் என்பதும் இலங்கை அரசுக்கு நன்கு தெரியும்.

அதனால்தான், இந்தியா வழங்கும் ஆயுதங்கள் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படமாட்டா என்ற உத்தரவாதத்தை அளித்து அந்த நிபந்தனையின் கீழ் அவற்றை வழங்குங்கள் என்று கையேந்துகின்றது இலங்கை.

இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளில் ஈழத் தமிழ் மக்களையும், புலிகளையும் வேறுபடுத்தி அணுகுவோம் என்ற சாரப்பட கொழும்பு அரசு கூறினாலும், படை நடவடிக்கைகள், அரசியல் செயற்பாடுகள் என்று வரும் போது ஒவ்வொரு தமிழ்ப் பேசும் மகனையும் புலியாகவே பார்க்கிறது இலங்கை அரசு என்பதே மெய்மை நிலை.

இப்போது திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் மீது அரச படைகள் ஆரம்பித்திருக்கும் படை நடவடிக்கைகளும், அதையொட்டி தமிழர் பிரதேசங்கள் மீது கண்மூடித்தனமாக - பெரும் மூர்க்கத்துடன் - முன்னெடுக்கப்படும் விமான, ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் இலங்கை அரசு, தனது நாட்டு மக்கள் என்று கூறும் தமிழர்களை எவ்வாறு கையாளுகின்றது என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கு நல்ல சான்று; உதாரணம்.

ஹிஸ்புல்லா இயக்கத்தினரை அழிக்கின்றோம் என்ற பெயரில் தென் லெபனான் மக்களின் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேலுக்கும், புலிகளை ஒடுக்குகின்றோம் என்ற பெயரில் மூர்க்கத்தோடு வாகரை, கதிரவெளி, திருகோணமலையின் வெருகல், ஈச்சிலம் பற்று, மூதூர் கிழக்கு, சேனையூர், சம்பூர், கட்டைபறிச்சான், நல்லூர், இலங்கைத் துறை முகத்துவாரம், புன்னையடி, சறுக்கல்முனை, பூநகர் போன்ற இடங்கள் மீது கணக்கின்றி - கண்மூடித்தனமாக - வான்வழி மற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தும் இலங்கையும் இவ்விடயங்களில் வேறுபட்டவையல்ல.

இந்நிலையில் இலங்கையின் கோரிக்கையை ஏற்று அதற்கு இந்தியா ஆயுத உதவி வழங்குவதும், இஸ்ரேலின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு ஆயுத உதவி வழங்குவது போன்றதே.

ஒரு பொறுப்புள்ள நாடு என்ற வகையில் (State Factor), இலங்கை அரசு அடிப்படை மனித உரிமைகளைப் பேணும் தனது பொறுப்பிலும், கடமையிலும் அதிக தவறுகளை இழைத்து வருகின்றது என்ற கருத்து சர்வதேச மட்டத்தில் மேலோங்கி வரும் இச்சமயத்தில், இலங்கைக்கு ஆயுத ரீதியில் உதவும் விவகாரத்தில் புதுடில்லி மிகக் கவனத்துடனும், அதிக அவதானத்துடனும் செயற்பட வேண்டிய கடமையுடையதாகின்றது.

எமது பிராந்திய வல்லாதிக்க நாடான இந்தியாவினதும் மற்றும் சர்வதேச சமூகத்தினதும் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் புறக்கணித்து, உதாசீனப்படுத்தி, அமைதி முயற்சிகளை அடியோடு புறந்தள்ளி, தீவிர போர்முனைப்புடன் காகளை நகர்த்துகின்றது இலங்கை அரசு என்பது இப்போது கண்கூடாகியுள்ளது.

ஆகவே, இச்சமயத்தில் -

இலங்கைக்கு அது கோரும் ஆயுத உதவிகளை இந்தியா வழங்கு வது, அமைதி முயற்சிகளை உதாசீனப்படுத்தி போர் முனைப்பில் தீவிரம் காட்டும் இலங்கையை மேலும் அத்திசையில் தூண்டி விடும் செயலாகவே அமையும். வீடெரிக்கும் செயலுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் உதவியாகவே அது அர்த்தப்படுத்தப்படும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான - அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு எதிரான - பாதகச் செயலாகவே அத்தகைய ஆயுத உதவி அமையும். மொத்தத்தில் ஈழத் தமிழர்களுக்கு சமாதி கட்டும் வேலை யாகவே அது முடியும்.

எனவே, அவ்வாறான வரலாற்றுத் தவறு எதையும் புதுடில்லி நிர்வாகம் இழைக்காது என்றும், அவ்வாறு புதுடில்லி தவறிழைக்கத் தமிழகம் அனுமதிக்காது என்றும் ஈழத் தமிழர்கள் நம்புகின்றார்கள்.



யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பிரமுகர்கள் உரைநிகழ்த்துவதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தமிழினியன், நேசன்)

# மூதூர் குண்டுத்தாக்குதல்களைக் கண்டித்து யாழ். பல்கலையில் நேற்று கண்டனக் கூட்டம்

## ஐ.நா.பொதுச்செயலருக்கு மகஜர்; ஜனாதிபதி மஹிந்தவின் கொடும்பாவியும் எரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.12

திருகோணமலை, மூதூர்ப் பகுதியில் இலங்கை அரச படைகள் மேற்கொள்ளும் விமானத்தாக்குதல் மற்றும் எறிகணை வீச்சுகளில் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து நேற்று யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரால் கண்டனக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 11 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இந்தக் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது

கிழக்கில் தமிழினத்தின் மீது அரச படைகள் கட்டவிழ்த்துவிட்டுள்ள தாக்குதல்களையும் படுகொலைகளையும் உடன் நிறுத்துமாறு வலியுறுத்திக் கோரியே இந்தக் கண்டனக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் அ.குமாரவடிவேல், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் மற்றும் விரிவுரையாளர்கள் அனைத்துப் பீடங்களின் மாணவர்கள் இந்தக் கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பதில் துணைவேந்தர், அரச அதிபர், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கலாராஜ், துறைசார் மாணவர் ஒன்றியங்களின் தலைவர்கள் இதில் கண்டன உரைகளை ஆற்றினர்.

**ஐ.நா. பொதுச்செயலாளருக்கு மகஜர் அனுப்பிவைப்பு**

பின்னர் மூதூரில் நடைபெறும் படுகொலைகளை தடுத்து நிறுத்த வழி ஏற்படுத்துமாறு கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு அனுப்பவுள்ள மகஜர் அங்கு வாசிக்கப்பட்டது. இதன் பின்னர் அந்த மகஜரை அனைத்துப் பீடங்களின் மாணவத் தலைவர்கள் ஒன்றிணைந்து அரச அதிபர் கே. கணேஷிடம் கையளித்தனர்.

**ஜனாதிபதி மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு**

இதன் பின்னர் கைலாசபதி கலையரங்கில் இருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி பறை முழங்க ஊர்வலமாக பல்கலைக்கழக முன்றிலுக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு மாணவர்கள் ஒப்பாரி வைத்து கதறியழ கொடும்பாவி தீ மூட்டி எரிக்கப்பட்டது.

இதன் காரணமாக யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் நேற்று பிற்பகல் ஒரு மணிவரை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(எ-8-190)

# மருத்துவப் பணியாளர் மீதான கிளைமோர் தாக்குதல்: சுகாதாரத்துறை ஊழியர் நேற்று வேலைப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.12

நெடுங்கேணி மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் கிளைமோர் தாக்குதலில் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ். மாவட்டத்திலுள்ள அரச மருத்துவத் துறைசார்ந்தோர் அடையாளப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

**யாழ். ஆஸ்பத்திரியில்**

நேற்றுக்காலை 11 மணியளவில் தமது பணிகளை நிறுத்திய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்கள் ஒரு மணிநேர அடையாளப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் முன்பாகவும் ஒரு மணிநேர அடையாளப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் உயரதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், மருத்துவமாதுக்கள் மற்றும் ஊழியர்கள் இந்தப் பகிஷ்கரிப்பில் இணைந்துகொண்டனர்.

வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட சுகாதாரத் துறைப் பணியாளர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

- மனித நேயப் பணியாளர்களை அழிப்பது முறையா?
- உயிரைக் காப்பது மானிட தர்மம் இதனை மேம்படுத்தும் மருத்துவ சேவை.
- மருத்துவப் பணிக்கு மலர்வளையம் கிரீடமா?
- உயிரைக் காக்கச் சென்றவர்களின் உயிரைப் பறித்தது நியாயமா?
- மனிதநேயப் பணியாளருக்கு மரணம்தான் கூலியா?
- மருந்துவப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்.
- உயிர் காக்கும் சுகாதார சேவைக்கு உலை வைக்கவேண்டாம்.
- அத்தியாவசிய பணிகளுககு அழிவைக் கொடுக்கலாமா?

அத்துடன், மாகாண சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் வைத்தியசாலைகளிலும் நேற்று பணியாளர்கள் அடையாளப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் எனப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(எ-15-51-13)

# நெடுங்கேணியிலும் கண்டனப் பேரணி

புளியங்குளம்,ஓக.12

மனிதநேயப் பணியாளர்கள் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும் -

பொதுமக்கள் மீது ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அராஜகங்களைக் கண்டித்தும் -

நேற்று முற்பகல் 11 மணியளவில் நெடுங்கேணியில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நெடுங்கேணி கமநல சேவை நிலைய முன்றிலில் இருந்து ஆரம்பமான இக் கண்டனப் பேரணி, நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனை வளாகத்தைச் சென்றடைந்தது.

தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து ஐ.நா.செயலாளர், கண்காணிப்புக் குழுத்தலைவர், வவுனியா மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர், செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோருக்கான கண்டன அறிக்கைகள் கையளிக்கப்பட்டன.

குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் வவுனியா மாவட்ட பொதுசன ஒன்றியத் தலைவர் வை.பூபாலசிங்கம் அறிக்கைகளை வழங்கினார்.

பொதுசன ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கண்டன உரைகளைத் தண்டுவன் பாடசாலை அதிபர் நாகேந்திரராஜா, குளவிசுட்டான் பாடசாலை அதிபர் சிவலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

(எ-203-355)

### நாளை

ஆடி 28
ஞாயிற்றுக்கிழமை
13.08.2006
திதி : சதுர்த்தி
காலை : 08.08
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பிற்பகல் : 12.49
சுபநேரம் : 09.04 - 10.35
ராகுகாலம் : 04.35 - 06.05

### உதயவாக்கு

கலக்கம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறது; கவலை ஒவ்வொரு நெஞ்சிலும் இருக்கிறது; அவற்றின் நிறம் வேறு; நிலைவேறு. - கண்ணதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையில் இடம்பெற்றுவரும் படுகொலைகளைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற கண்டனப்பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பேரணியில் கலந்துகொண்ட மக்களையும் பேரணியில் கலந்துகொண்ட மாணவன் ஒருவன் பதாதைகளைத் தாங்கியிருப்பதையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: மு.கந்தசாமி பரந்தன் செய்தியாளர்)

# தமிழர் படுகொலைகளைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டனப்பேரணி

பரந்தன்,ஓக.12

திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் தமிழர் படுகொலைகளைக் கண்டித்து கிளிநொச்சியில் மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்று நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகிய இந்தப் பேரணி கிளிநொச்சியில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி அலுவலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு பேரணி சென்றடைந்ததும் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியிடம் கிளிநொச்சி பொது அமைப்புகளின் செயலாளர் இ.வேளமாலிகிதன் கண்டன அறிக்கையை வழங்கினார்.

தொடர்ந்து யுனிசெவ் நிறுவனப்பிரதிநிதி, யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதி ஆகியோரிடம் முறையே கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை, பொதுஜன அமைப்பின் பிரதிநிதி இ.இரத்தினமணி ஆகியோர் கண்டன அறிக்கைகளை வழங்கினர்.

கண்டனப் பேரணி நிறைவில் கிளிநொச்சி மாவட்ட பொதுஜன அமைப்புகளின் தலைவர் தி.பிரபாகரன் கருத்துரை வழங்கினார்.

கண்டன அறிக்கையைப் பெற்றுக் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வதிவிடப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில்:

நடந்துகொண்டிருக்கும் இக்கொடிய யுத்தத்தை நிறுத்துவதற்கு நாம் எம்மாலான முழு முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம். விரைவில் கொடிய யுத்தம் நிறுத்தப்படும். இந்த அறிக்கையை உரியவர்களுக்கு அனுப்புவோம்- என்றார்.

இப்பேரணியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(எ-352-203)

# திருமலையில் தமிழர்கள் படுகொலை ஸ்ரீலங்கா அரசின் அராஜகச் செயலே!

## கிளிநொச்சி பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

பரந்தன்,ஓக.12

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது மற்றும் அவர்கள் மீதான கெடுபிடிகள் ஸ்ரீலங்கா அரசின் அராஜகத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம்.

தமிழர்களின் படுகொலைகளைக் கண்டித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கிளிநொச்சி அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்துள்ள மகஜரிலேயே மேற்படி ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தின் அறிக்கை வருமாறு:

இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் வாழ்ந்து வரும் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை சட்ட பூர்வமாகப் பெற்றுக்கொள்வதற்கு தமிழ் பேசும் இனம் வரலாற்று ரீதியில் மேற்கொண்ட அரசியல் முனைப்புக்களைத் தாங்கள் அறிவீர்கள்.

சமகாலத்தில் தங்கள் சமூகத்தினுடைய கரிசனையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் விருப்பிற்குரியதே, எனினும் அம்முயற்சிகள் தந்திருக்கின்ற தோல்விகளும் ஏமாற்றங்களும் விசேட கவனத்திற்குரியன. சமநேரத்தில் ஸ்ரீலங்கா யுத்த முனைப்பினையும், ஒடுக்குமுறையினையும் சட்டபூர்வமாகவும் நிறுவன மயப்பட்டும் மேற்கொள்கின்றது. மனித உரிமை மீறல்களும் மனிதநேயப் புறக்கணிப்புக்களும் சர்வதேச சமூகம் பார்த்திருக்க நிகழ்ந்தேறுகின்றது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

ஈழத்தமிழர்கள், சர்வதேச சமூகம் முன்பாக வாழ்வியலின் சகல அடிப்படைத் தகைமைகளில் இருந்து நிராகரிக்கப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே பலதடவைகள் எமது அமைப்பும் ஈழத்தமிழர்களும் எமது வாழ்வியல் அரசியல் நிலைப்பாட்டை தங்கள் சமூகத்தின் உயரிய நடவடிக்கைக்கும் கரிசனைக்கும் தந்திருக்கின்றோம். அதனால் எமது மக்களின் வாழ்நிலையில் எத்தகைய மாற்றங்களும் நிகழ்ந்து விடவில்லை என்பதே யதார்த்தமானது. இதனை மிகுந்த கவலையோடும் விரக்தியோடும் தங்களுக்கு மீண்டும் வெளிப்படுத்துகின்றோம்.

**தாயகத்தின் முதன்மைப்பிராந்தியம் திருகோணமலை**

எமது தாயகத்தின் முதன்மைப்பிராந்தியமான திருகோணமலையில் நடைபெறும் யுத்த அடிப்படைகளின் உள்நோக்கத்தினை தாங்கள் புரிந்துகொள்வது சிரமமானதொன்றல்ல, உலக சமூகம் பேசுகின்ற, மதிக்கின்ற, கௌரவிக்கின்ற உயரிய மனித விழுமியங்கள் அவமதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்காக உணவு, மருந்து, போக்குவரத்து என்பன முற்றுமுழுதாகத் தடுக்கப்பட்டுள்ளன. 40 ஆயிரம் பொது மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டுள்ளார்கள். தங்கள் சமூகத்தின் கரிசனைக்குரிய சிறுவர்களும், பெண்களும் அவலத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். ஸ்ரீலங்கா அரசு மனித அவலத்தை அங்கு உருவாக்கி மனித நேயத்தை சாகடித்துள்ளது. அரசின் இத்தகைய கொடூரசெயல்கள் சர்வதேச சமூகம் மதிக்கும் மனித விழுமியங்கள் தொடர்பான சிந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் ஏற்புடையதா?

ஸ்ரீலங்கா அரசானது தார்மீக நெறி குறைந்த ஓர்பயங்கரவாத அரசாங்கமாகவே செயற்படுகின்றது. தமிழர் பிரதேசங்களில் நாள்தோறும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இராட்சத விமானங்கள் மக்கள் குடியிருப்புக்களில் குண்டுகளை வீசுகின்றன. பல்குழல் எறிகணைகள் மக்கள் மீது செறிவாக ஏவப்படுகின்றன. மக்கள் குடியிருப்புகள் பல இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளன.

கைதுகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், சுற்றிவளைப்புக்கள், உணவுப்பொருள்கள் உள்ளிட்ட பொருளாதாரத் தடை என்பன உச்சமுனைப்புப் பெற்றுள்ளன. சர்வதேச உள்ளூர் மனிதநேய அமைப்புக்களின் பணிகள் தடுக்கப்பட்டுள்ளன. மனிதநேய பணியாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். நோயாளர்களும் நோயாளர் காவுவண்டிகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. கண்காணிப்புக் குழுவினர் கூட பதுங்கு குழிகளில் உயிர் பாதுகாப்பு தேட வேண்டிய பேரவலம் தோன்றியுள்ளது. இது தமிழர்களின் இருப்பு எவ்வாறு அச்சுறுத்தப்பட்டுள்ளது என்பதை அளவீடு செய்ய போதுமானது. இத்தகைய செயல்கள் சர்வதேச சமூகத்தின் வரையறைகளை மீறிய வன்முறைகளாகக் கருத முடியும். இத்தகைய பயங்கரவாத அரசாக சிறிலங்கா தன்னை வெளிப்படுத்தியுள்ளது.

மேற்படி எமது கருத்துக்களையும் தங்கள் சமூகத்தின் நேரடி அவதானங்களையும் தொகுத்து பகிர்ந்து ஆராய்ந்து பார்ப்பீர்கள் என நம்புகிறோம். தமிழர்களின் விடுதலைப் போராட்ட நியாயத்தைப் பார்த்துக் கொள்ள தங்கள் சமூகம் பெருந்தன்மையுடன் கவனம் செலுத்த வேண்டும் என விரும்புகின்றோம். சர்வதேசம் தேசிய இனங்களுக்கான உரிமை சமுதாயத்திற்கு அமைவாக தாங்கள் செயற்படவேண்டுமென அவாவுகின்றோம். எதிர்காலத்தில் சிறிலங்கா அரசின் அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தமிழ் சமூகம் தமது இருப்பை உறுதி செய்ய எடுக்கும், எடுக்கப் போகும் அரசியல் தீர்மானங்களை தங்கள் சமூகம் வரவேற்று ஆதரிக்க வேண்டும் என்பதை விநயமுடன் கேட்டுக் கொள்கிறோம். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-352)

# ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.12

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன வடபிராந்திய இளைஞர் சபையினரின் ஆன்மீக மாத இறுதி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடபிராந்திய இளைஞர் சபைத்தலைவர் பூ.ரஜீத்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடபிராந்திய இணைப்புக் குழுத்தலைவர் இ.வசந்தசேனன் ஆசியுரை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து 'ஆன்மீகமும் உலகியலும், என்னும் தலைப்பில் யாழ்.சத்தியசாயி சேவா நிலையத் தலைவர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தியும் 'இளைஞர்களும் இன்றைய தேவைகளும்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் பேராசிரியர் நா.ஞானக்குமாரும் உரைநிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் 'ஆன்மீகம் அறிவுத்திறனை மேம்படுத்த அவசியமா? அவசியமில்லையா? என்ற பொருளில் விவாத அரங்கும், கலை நிகழ்வுகளும், பகவானை வெளிப் படுத்தும் திரைப்படக்கண்காட்சியும் இடம் பெறவுள்ளன.

நிகழ்வின் இறுதியில் போட்டிகளில் வெற்றிபெற்றமாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(203)

# தென்மராட்சிப் பாடசாலைகளில் சிறுவர் கழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் சிறுவர் கழகங்கள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக அண்மையில் குடமியன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கரம்பைக்குறிஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று திட்ட உத்தியோகஸ்தர் நா.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(190)

# சிறுவர் நன்னடத்தை அலுவலர்களுக்கு மோ.சைக்கிள்; அலுவலக உபகரணங்கள்

## இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஓக.12

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தால், யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான உத்தியோகபூர்வ கையளிப்பு நிகழ்வு நேற்றுக்காலை 11 மணியளவில் 'யாழ். பிள்ளையார் இன்' விடுதியில் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பங்காளரும் முகாமைத்துவ உத்தியோகத்தருமான இ.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ்.மேலதிக அரச அதிபர் (சுனாமி) க.செந்தில்நந்தனன், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத் திட்ட முகாமையாளர் எஸ்.மகேந்திரன் மற்றும் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்சந்திரன், சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள இணைப்பாளர் திருமதி சிவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மோட்டார் சைக்கிள்களின் ஆவணங்களை மேலதிக அரச அதிபர் க.செந்தில்நந்தனன் (சுனாமி), சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள இணைப்பாளர் திருமதி சிவராசாவிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு [illegible] கள், அலுவலக உபகரணங்கள் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-13)

# அலுவலர்களின் சம்பளக் குறியீடு அறிவிப்பு

தென்மராட்சி, ஓக.12

அரச திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றுவோருக்கு 2006 புதிய சம்பள அளவுத்திட்டப்பிரகாரம் சில திணைக்கள உத்தியோகத்தர்களின் சம்பளக் குறியீடு (Salary Code) விவரம் தேசிய சம்பளப் பதவியணி ஆணைக்குழுவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சட்டத்திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த 43 பதவியணிக்குரிய சம்பளக் குறியீடு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அரசினால் முன்னர் வெளியிடப்பட்ட 06/2006 சம்பளச் சுற்றறிக்கையில் இப் பதவியணிகளுக்குரிய சம்பளக் குறியீடு குறிப்பிடப்படாததால் பல அரச அலுவலகங்கள் ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கு உரிய சம்பள அளவுத் திட்டத்தில் சம்பளம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ மழைக்கு முன்னர் வழுக்கையாற்று வாய்க்கால்கள் புனரமைக்கப்படவேண்டும்

## மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஓக.12

வழுக்கையாற்றுப் படுக்கையிலுள்ள குளங்களின் வாய்க்கால்கள் மற்றும் துருசுகள் பருவமழைக்கு முன்பாக புனரமைப்புச் செய்யப்படவேண்டும். - இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் யாழ்.நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.மா.க.முதலியார் கடந்த வாரம் யாழ். நீர்ப்பாசனத் திணைக்கள பொறுப்பதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது-

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இந்தப் பிரதேசத்திலுள்ள வயற்காணிகளில் 2006/2007 வருடகாலபோக நெல் விதைப்பு ஆரம்பிக் கப்படவுள்ளது. இந்த நிலையில் இப்பிரதேசத்தில் உள்ள வழுக்கையாற்று படுக்கையிலுள்ள பல்வேறு குளங்களின் வாய்க்கால்கள் மற்றும் துருசுகள் தூர்ந்து போய் வெள்ளம் வடிந்தோடமுடியாது உள்ளது.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நலன்கருதி குளவாய்க்கால்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

அத்துடன் துருசுகளும் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்படவேண்டும்.

எதிர்வரும் மாரி மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இவற்றைப் புனரமைத்துத் தருவதற்கு ஆவனசெய்யப்பட வேண்டும் - என்று அதில் உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், வலி. தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(எ-204-135)



அளவெட்டி ஈஸ்வரன் முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வின் வினோத உடைப் போட்டியில் அருட்கவி விநாசித்தம்பி போன்று வேடமிட்டு முதலாம் இடத்தைப் பெற்ற ஞானசுதன் றமாஜினியைப் படத்தில் காணலாம். இவர் அருட்கவி விநாசித்தம்பியின் பூட்டப்பிள்ளையாவார். (204)

## 'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட

# தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் கணித வினாடிவினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே 'உதயன்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டிகளில் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர், விவரம் வருமாறு-

**தமிழ் மொழி மூலம்**

**தரம் 6** - சி.சாயித்தியன்(உசன் இராமநாதன் ம.வி), மோ.தனுராஜ்(சாவகச்சேரி மகளிர் ம.வி.), சி.லதுஷா(விடத்தற்பளை கமலாசனி ம.வி.)

**தரம் 7** - இ.நிதிஸ்ராம்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),த.தாரகா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சி.செந்தூர்க்குமரன்(கைதடி முத்துக்குமாரசாமி ம.வி)

**தரம் 8** - ப.சாகித்தியன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கனிஷ்ஸா(உசன் இராமநாதன் ம.வி.), ச.சுயேந்திரன்(மீசாலை வீரசிங்கம் ம.வி.)

**தரம் 9** - கு.கோபிகா(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), ப.தனுஜா(கைதடி நாவற்குழி அ.த.க.), ப.பானுப்பிரியா(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), பா.நிலாஜினி (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

**தரம் 10** - வ.கோபிகா(மீசாலை வீரசிங்கம் ம.வி.), ந.கோகினி(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), கு.பாலகஜன்(கைதடி விக்னேஸ்வரா ம.வி.)

**தரம் 11**- ப.மதுவந்தி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),தி.மிதிலா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.சஜெந்துஜா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**ஆங்கில மொழி மூலம்**

**தரம் 6** - ரி.தர்சிகா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஜே.கம்சனா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஆர்.தேனுஷன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**தரம் 7** - ரி.அபிநயா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி); கே.சரன்ஜா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.அஸ்வினி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

**தரம் 8** - ரி.அனோஜன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.நிவேதிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.விசாகன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (204)




## ஸ்ரீ லலிதா நாமார்ச்சனை மஞ்சரி வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவராக இருந்து பெருந்தொண்டாற்றியவரும் நல்லூர் சிவன்கோயில், சிலாபம் முனீஸ்வரன் ஆலயம் ஆகிய்வற்றின் ஆதீனகர்த்தாவுமான அமரர் பேராசிரியர் கைலாசநாதகுருக்கள் தம்பதியரின் நினைவாக ஸ்ரீ லலிதா நாமார்ச்சனை மஞ்சரி என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

வண்ணை வேங்கடேசப் வரராஜப் பெருமாள் ஆலய சிவாச்சாரியாரான ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரன் குருக்களால் இந்த நூல் வெளியிட்ப்பட்டுள்ளது. சமஸ்கிருத மொழியில் அமைந்த இந்த நூல் அந்தணர்கள் பயன்பெறும் வகையில் ஆக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

## சிறுவனைக் காணவில்லை: ஆணைக்குழுவில் முறைப்பாடு

உடுவில் பகுதியில் வசிக்கும் சிறுவன் ஒருவர் காணாமற்போய் உள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

உடுவில் செபமாதா கோயிலடியைச் சேர்ந்த ஜெ.திவர்த்தன்(வயது 17) என்பவரே காணாமற்போய் உள்ளார்.

இவர் கடந்த புதன்கிழமை பிற்பகல் வீட்டிலிருந்து விளையாடச் சென்றவர் வீடு வந்த சேரவில்லை என அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (190)






கொக்குவில் இந்துக் கல்லூரி கணனிப் பிரிவு ஆசிரியர் ஆர்.சுகுமார் எழுதிய 'தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம்' தொகுப்பின் 2ஆம் பதிப்பு வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக.கல்விப்பீட பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் நூலை வெளியிட்டு வைக்க, தொழிலதிபர் திரு. திருமதி ஆ.மா. சுப்பிரமணியம் மாலதி தம்பதியினர் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். நூல் நயப்புரையை மொழி அபிவிருத்திக் குழு சிரேஷ்ட உறுப்பினர் ஜே.யோகராஜ் நிகழ்த்தினார். விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

# யாழ். சுகாதாரத்துறை ஊழியர்கள் சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.தென்மேற்கு,ஓக.12

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள அலுவலகங்களிலும் மீள் நியமனம் பெற்று ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வரும் அலுவலர்கள், சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்கமுடியும்.

குறிப்பிட்ட அலுவலர்கள் 2007 ஆம் ஆண்டில் தொடர்ந்து கடமையாற்றுவதற்கான சேவை நீடிப்பு விண்ணப்பங்களை யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை கோரியுள்ளது.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் தற்போது நீண்டகாலமாக நிரப்பப்படாதிருக்கும் டாக்டர்கள், பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், பொது சுகாதார வெளிக்கள உதவியாளர்கள் ஆகிய பதவிகளுக்கு ஓய்வுபெற்றவர்கள் மீள்நியமனம் பெற்று ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றார்கள்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் சேவை முடிவுறும் இந்த உத்தியோகத்தர்கள் அடுத்த ஆண்டில் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் -

இதற்கான விண்ணப்பத்தை உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் -

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(எ-204-135)

# கட்ட வேலைகள் பூர்த்தியடையாததால் மணற்காடு மாணவருக்குப் பெரும் சிரமம்

கரவெட்டி,ஓக.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மணற்காடு றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கட்டட வேலைகள் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை. இதனால் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் பெரும் சிரமம் எதிர்கொள்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது இந்தப் பாடசாலை பாரிய சேதமடைந்தது. சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் கட்டடப் பணிகள் நடைபெற்று வந்தன. அவை முழுமையடையும் முன்னர் தற்போது கட்டடப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அரைகுறையாக உள்ள கட்டடங்களில் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ளமுடியாதுள்ளது.

280 மாணவர்கள் வரை இந்தப் பாடசாலையில் கற்று வருகின்றனர். இவர்களின் கற்றல் செயற்பாடுகள் தடையின்றி நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-204-70)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

# சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள்

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் இவ்வாண்டு நடத்தப்பட்ட சைவசித்தாந்த பண்டிதர் பட்டப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சைவசித்தாந்த பிரவேச பண்டிதர் , சைவசித்தாந்த பாலபண்டிர்,சைவசித்தாந்த பண்டிதர் என மூன்று பட்டங்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகளே வெளியிடப்பட்டுள்ளன என்று சைவபரிபாலன சபையின் பரீ ் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சு.செல்லத்துரை தெரிவித்தார்.

பட்டப்பரீட்சைகளில் சித்திபெற்றவர்களின் பெயர்,முகவரி, தரம் பற்றிய விவரம் வருமாறு-

**சித்தாந்த பிரவேச பண்டிதர்**

இரண்டாம் பிரிவு - வாஹினி ஸ்ரீதரன் (கொழும்பு), கார்த்திகா ஜீவரெட்ணம் (வாழைச்சேனை), டிஹாசி நேமிநாதன் (வாழைச்சேனை), மூன்றாம் பிரிவு- அரியநாயகம் ஸ்ரீதர் (வாழைச்சேனை)

**சித்தாந்த பால பண்டிதர்**

இரண்டாம் பிரிவு - ஷர்மிளா கணேசன் (அக்கரைப்பற்று), கவிதா ஏகாம்பரநாதன் (சித்தன்கேணி)

**சித்தாந்த பண்டிதர்**

இரண்டாம் பிரிவு - ஜெயசித்திரா ஜெயசிங்கம்(காரைநகர்), சறோஜினிதேவி தம்பிராசா(நல்லூர்),தவராசா குமரன்(மல்லாகம்),சியாமினி இராசரத்தினம் (அச்சுவேலி), யோகநாதன் சிவகுமார்(வாழைச்சேனை) சண்முகராஜா சிறிகாந்தன்(யாழ்ப்பாண தவராசா விக்னேஸ்வரன் (மன்னார்). (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களே வடக்கு - கிழக்கு மாகாணத்தில்!

## இப்படிக் கூறுகிறார் கல்வி அமைச்சின் உயரதிகாரி

வலி வடக்கு, ஓக.12

வடக்கு - கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் மட்டுமே காணப்படுகின்றன. என்று வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) சி.எஸ்.சற்குணம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்கள் நடத்தி வரும் போராட்டம் குறித்த கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த காலத்தில் சுமார் 8ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டபோதிலும் இவ்வெற்றிடங்கள் பலவும் கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனம் மற்றும் கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

தற்போது வடக்கு - கிழக்கில் காணப்படும் ஆயிரம் ஆசிரியர்களின் நியமனங்களையும் வழங்குவதற்காக கல்வி அமைச்சிடம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு கோரிக்கை விட்டுள்ளது.

உரிய நியமனம் செய்வதற்கான அனுமதி கிடைத்ததும் அவ்வெற்றிடங்களும் நிரப்பப்படும். இவ்வெற்றிடங்கள் பாடரீதியாகக் காணப்படுகின்றன - என்றார். (203-86)

# உறுதியான பதில் கிடைக்கும்வரை போராட்டம் தொடர்ந்து முன்னெடுப்பு

## யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

வலி.வடக்கு,ஓக.12

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற எழுத்துமூலமான - உறுதியான பதில் கிடைக்கும்வரை யாழ். வலயக் கல்வி அலுவலகம் முன் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

அதுமட்டுமன்றி, குடாநாட்டிலுள்ள ஏனைய வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் இதனை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்தை உதாசீனப்படுத்தும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்ட கருத்து நேற்றுமுன்தினம் வெளியான 'உதயனில்' பிரசுரமாகியிருந்தது. இதுகுறித்து எமது விசனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிகநீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுவந்தன. சுற்றறிக்கைக்கு மாறாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டதோடு தகுதியானவர்களுக்கான நியமனங்கள் மறுக்கப்பட்டுள்ளன. இதனை ஆதாரபூர்வமாக எம்மால் நிரூபிக்கமுடியும் - என்று அதிலுள்ளது.(எ-204-86)

# விண்ணப்பங்கள் அதிகம் வழங்கப்பட்டாலே புங்குடுதீவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை

## *மின்சாரசபையினர் யாழ். அரச அதிபருக்குத் தெரிவிப்பு*

நல்லூர்,ஓக.12

மின்சாரம் வழங்குமாறுகோரி அதிகமான விண்ணப்பங்களைக் குடியிருப்பாளர்கள் மின்சாரசபைக்கு அனுப்பிவைத்தால் மட்டுமே புங்குடுதீவில் மின்விநியோக செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மின்சாரசபை ஆரம்பிக்கும் என்று மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவுப் பகுதி மக்களுக்கான மின்விநியோகம் தொடர்பாக யாழ். அரச அதிபர் மின்சாரசபை அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்:-

புதிய இணைப்புகளுக்கான வயர்கள் பொருத்தப்படவேண்டிய பகுதிகளில் இவற்றைப் பொருத்தும்படி மின்சாரசபை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

குறைந்தபட்சம் 75குடியிருப்பாளர்களாவது தமது வீடுகளுக்கான மின் இணைப்பைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே மின்சாரசபை தனது செலவை ஓரளவாவது கட்டுப்படுத்தமுடியும் என்று மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர் - என்றார்.

யாழ். அரச அதிபர் புங்குடுதீவிற்கு வருகைதந்திருந்தபோதே இதனைத் தெரிவித்தார். (203-111)

# சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உள்ளோர் கொடுப்பனவுகள் கிடைக்காவிடின் முறையிடலாம்

## வேலணைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

நல்லூர், ஓக.12

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் கிடைக்காவிடில் தாமதமின்றி மேலிடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேலணை பிரதேச செயலர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட குடும்பத்தில் இறப்பு போன்ற துயரச் சம்பவங்கள் இடம்பெற்றால் அவர்களுக்கு உடனடியாக ரூபா 10 ஆயிரமும் குழந்தை பிறக்கும் சமயத்தில் ஆயிரத்து 500 ரூபாவும் திருமணத்திற்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கும்சமயம் விடுமுறை நாளாக இருப்பினும்கூட அன்றையதினமே இந்தக் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்தக் கொடுப்பனவுகள் உடன் கிடைக்காவிடில் நீங்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும் என வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மேலும் தெரிவித்துள்ளார். (203-111)

## பெரியாழ்வார் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

குடத்தனை,ஓக.12

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை ''ஆபத்பாந்தவன்'' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ம.சிவானந்தன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (204-78)

## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இம்முறை பகல் திருவிழாவைத் தொடர்ந்து இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம்,ஓக.12

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவில் கார்த்திகைத் திருவிழாவன்று பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

வழமையாகக் கார்த்திகைத் திருவிழாவன்று மாலைத் திருவிழாவைத் தொடர்ந்து இடம்பெறும் இசை அர்ச்சனை நிகழ்வு இம்முறை பகல் திருவிழாவைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கார்த்திகைத் திருவிழா தினத்தன்று பகல் திருவிழாவைத் தொடர்ந்து இசை அர்ச்சனையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறும். (203)

## *நல்லூர் ஆலயச் சூழலில் இன்று*

நல்லூர்,ஓக.12

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வில் 14ஆம் நாளான இன்று சனிக்கிழமை ''இந்து சமயத்திற்கு இளைஞர் ஆற்றும் பங்கு '' என்ற பொருளில் செல்வமனோகரனின் சிறப்புச் சொற்பொழிவும் [illegible] பெறவுள்ளன. (203-111)

## நல்லூர் உற்சவ கால சிறப்பம்சம் 14ஆம் திருவிழா



## வேல் முருகா மால் மருகா!

இராகம் - கமாஸ் தாளம் - ஆதி



பல்லவி

மாமயில் ஏறிவா - வா

அநுபல்லவி

வேல் முருகா மால் மருகா (மாமயில்)

சரணங்கள்

கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமாந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் (மாமயில்)

ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலந்தன்னில்
நீபோந்து காத்திடல் வேண்டும் (மாமயில்)

- போகர் சுவாமிகள்.

## காணலாம் கந்தன் கழல்

ஓசை ஒளியாலே ஒற்றாகும் உள்ளத்தில்
தேசையெலாம் நல்லூரிற் தேடலாம் - ஆசையுடன்
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாங் கந்தன் கழல்.

- இறைமணி சி.இராசரத்தினம்.

## குமரனே! தீர்வினைக் காட்டு!

*அலங்காரக் கந்தாவுன் திருக்கோலங் காண*
*ஆயிரங் கண்வேண்டும் ஐயா!*
*விலங்காக நாளும் வீதியில் மாளும்*
*விதிமாற வேண்டுமே ஐயா!*
*நலங்காக்கும் நல்லை நாதனே உன்னை*
*நாடினோம் நல்வழி காட்டு! - தமிழ்க்*
*குலங்காக்க வேண்டிக் கூப்பினோம் உன்னை*
*குமரனே! தீர்வினைக் காட்டு!*

- நயினை இராகுலன்.

## பஞ்சாய் பறந்திடுமே பட்டதுயரத்தனையும்

கொஞ்சு தமிழ் குமரா தினமுனை
நெஞ்சார துதிக்கின்றோம்
வெஞ்சமர் இனி வேண்டாம்
அஞ்சலர் இனி எவருமில்லை

தஞ்சமென்று நல்லூர் வாசல்
அஞ்சாமல் வந்துநின்றால்
பஞ்சாய்ப் பறந்திடுமே
எஞ்ஞான்றும் பட்டதுயர்

செஞ்சொற்மாலை புனைந்து
வஞ்சமின்றிக் கேட்கின்றோம்
அஞ்ஞானம் அகற்றி நம்மை
மஞ்ஞை வாகனனே காத்திடுவாய்

- அளவையூர் ஸ்ரீபுராதனி இராஜகோபாலன்.

## தொழுதிடு நெஞ்சமே!

*தில்லைச் சிவனாரின் திருமைந்தன் கந்தனவன்*
*நல்லைத் தலமதிலே அமர்ந்தானே - எல்லையிலாக்*
*கருணையுளம் கொண்டவனைத் தொழுதென் நெஞ்சமே*
*பெருகிடவே காண்பாய் நலம்!*

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

HERO HONDA World No.1

இரத்தின கோமல்ஸ்

இல. 65, 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

0777 340056
021 222 6185
021 222 9231

RG

(சி/50029) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து மீண்டும் மூதூரில் குடியமர்த்தியே தீருவோம்!

## சபையில் அதாவுல்லா சூளுரை

கொழும்பு, ஓக. 12

முஸ்லிம்களுக்கு ஆயுதங்களும், ஆயுதப் பயிற்சியும் வழங்கி கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அரசும், நாங்களும் மூதூரில் மீண்டும் குடியேற்றியே தீருவோம் என அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நேற்றுமுன்தினம் சபையில் சூளுரைத்தார்.

சபை ஒத்திவைப்பு விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

புலிகள் எப்போதும் முஸ்லிம்களை அடித்துக் கொண்டிருக்கவேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் அங்கு ஓடிச்சென்று காப்பாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கக்கூடாது.

மூதூர் முஸ்லிம்களைப் பகடைக்காய்களாக்கிக்கொண்டு திருமலை துறைமுகத்தைக் கைப்பற்றுவதே புலிகளின் நோக்கம். மூதூரிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறிய போது புலிகள் அவர்களை ஒரு மலைப் பகுதிக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது ஒரு பெண் புலி ''அண்ணே போகாதீர்கள். உங்களைக் கொல்லப்போகிறார்கள்'' எனத் தெரிவித்திருக்கிறாள். புலிகள் அவளையும் கொன்றிருக்கிறார்கள்.

கிழக்கில் வன்னியிலிருந்து வந்த பெண் புலிகளும், ஆண்புலிகளும்தான் கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். வன்னிக் கொலை வெறியர்கள் தான் இதைச்செய்கிறார்கள்.

பிரபாகரன் ஒரு நாளாவது காட்டை விட்டு வெளியே வந்து வடக்கு - கிழக்கை ஆளமுடியுமா? பிரபாகரன் இருதய நோயில் இறந்தால் பின்னர் நடப்பது என்ன?

முஸ்லிம் இளைஞர்களை பாதுகாப்புப் படையினர் இணைத்துக்கொள்ள அரசு முனைந்தபோது ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமய ஆகியகட்சிகளும் எதிர்த்தன. முஸ்லிம் இளைஞர்கள் பாதுகாப்புப் படையில் இணைந்து கொள்வதை முஸ்லிம் காங்கிரஸும் எதிர்த்தது. இது தவறானது. ஆயுதங்களை வைத்திருப்பவர்களுடன் ஆயுதங்கள் மூலமாகத்தான் நாம் பேசவேண்டும்.



மூதூரில் ஒரு சம்பவம் நடந்துவிட்டால் அதை அரசியல் லாபத்துக்காக பயன்படுத்தப் பார்க்கிறார்கள்.

மலையடிவாரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட முஸ்லிம்கள் மீது எறிகணை வீச்சில் 27 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அப்படி எறிகணை வீசப்பட்டிருக்காவிட்டால் புலிகளால் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பார்களே - என்றார்.

(ஐ)



நாடாளுமன்றத்திலிருந்து...

# 'ஜயசிக்குறு' நடவடிக்கையின்போதே சம்பூர், மாவிலாறு புலிகள் வசமாகின

## சமாதான காலத்தில் அல்ல என்கிறார் ஐ.தே.க. பிரமுகர்

கொழும்பு, ஓக.12

ஜயசிக்குறு நடவடிக்கையின் போதே 1997 ஆம் ஆண்டு மாவிலாறு, சம்பூர் பிரதேசங்களிலிருந்து இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்பட்டன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் சம்பூர், மாவிலாறு என்பன புலிகள் வசமாகின தென்பது உண்மையில்லை என்று ராஜித சேனாரத்தன எம்.பி. (ஐ.தே.க) நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

ஒத்திவைப்புவேளை பிரேரணையில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இப்போது மாவிலாறு பகுதியில் இடம்பெறும் மோதல்களில் காயமுற்ற படைவீரர்களுடன் அம்புலன்ஸுகள் திருமலை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றன. இப்போதே ஐந்து படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மூதூர் பிரச்சினை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மூதூர் சிங்கள வித்தியாலய அதிபருடன் நான் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டேயிருந்தேன். படையினரின் ஷெல், ஆட்லறி தாக்குதல்களினாலேயே மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அவர் சொன்னார்.

சர்வதேச உதவி வழங்கும் நிறுவன ஊழியர்கள் 17 பேர் மூதூரில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் சர்வதேச ரீதியில் எமக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

மாவிலாறு அணைக்கட்டை எதுவித நிபந்தனையும் இன்றி திறக்கப் போவதாக புலிகளும், கண்காணிப்புக் குழுவும் அறிவித்த பின்னரே அதைக் கருத்திற்கொள்ளாமல் படையினர் தாக்குதல் நடத்தினர்.



இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் பொலிஸார் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். அங்குள்ள மக்கள் இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சியளிப்பது தமிழ் மக்களைக் கொலை செய்வதற்குத்தான் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப்படையினருக்கு சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருந்த கௌரவத்துக்கு மீண்டும் இழுக்கு ஏற்பட்டுள்ளது. பௌத்த பிக்குகளுக்கு அரசியலும் தெரியாது. யுத்தமும் தெரியாது. இவர்கள் யுத்தம் செய்ய முயற்சிக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பௌத்த தர்மத்தைப் போதிக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வுகாணவேண்டும். இதற்கு ஐ.தே.கட்சி எப்போதும் ஆதரவளிக்கும். சமாதான நடவடிக்கை தொடர்பான எமது முதலாவது கூட்டம் இம்மாதம் 17ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது - என்றார்.

(ஐ)

# முஸ்லிம் மக்களின் நலன்பேணும் வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்துங்கள் !

## வாய்ச்சவடாலை விடுத்து விடயத்தைக் கவனிக்க ஹக்கீம் வற்புறுத்தல்

கொழும்பு, ஓக.12

''யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்த வேண்டியது இப்போது அவசியமாகியுள்ளது. முஸ்லிம்களின் நலன்கள், பாதுகாப்பு குறித்தும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் ஷரத்துகள் சேர்க்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணமுடியும். எனவே, உடனடியாக பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்''

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூம் ஹக்கீம் எம்.பி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

மூதூரிலிருந்து வெளியேறி ஆங்காங்கே பரிதவித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக துரித நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான விவாதமே இப்போது அத்தியாவசியமாகியுள்ளது. அதை விடுத்து படையினரது வீரதீரச் செயலுக்குப் பாராட்டுத் தெரிவித்து இங்கு உரையாற்றுவது முக்கியமல்ல. நான் படையினரது நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிடவில்லை.

இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துவது தான் இன்று அத்தியாவசியத் தேவையாகும்.



யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதிக்கின்றோம் என்று அரசும் தெரிவிக்கின்றது. புலிகளும் தெரிவிக்கின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் இன்று பேணப்படுகின்றதா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

பச்சனூர், 64ஆம் மைல்கல் பகுதிகள் ஊடாகச் சென்ற முஸ்லிம் மக்களை புலிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். பெண்கள், ஆண்கள், பிள்ளைகளை தனித்தனியாகப் பிரித்து கொளுத்தும் வெயிலில் கர்ப்பிணிகள் கூட நிறுத்தப்பட்டனர்.

பச்சனூர் பகுதியில் இன்றும் சடங்கள் கிடக்கின்றன. மனிதாபிமான முறையில் அடக்கம் செய்யக் கூட முடியவில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தவர்களுக்குக் கூட அப்பகுதிக்குச் செல்ல முடியவில்லை.

மூதூர் மோதல்களால் முஸ்லிம்கள் மட்டும் இடம்பெயர்ந்து விடவில்லை. தமிழ் மக்களும் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ளனர்.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் எமது நாட்டுக்குத் தேவையில்லை- என்றார் அவர்.

(உ)

# தொண்டு நிறுவனப்பணியாளர் கொலை; நோர்வே அகதிகள்சபை கடும் கண்டனம்!

திருகோணமலை மூதூரில் அரச நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நோர்வே அகதிகள் சபை கண்டித்துள்ளது.

இந்தக்கொடூரச்செயலானது பொது மக்களினதும் நிவாரணப் பணிப்பாளர்களினதும் பாதுகாப்பை ஆபத்திற்கு உள்ளாக்கியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலையடுத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மூதூரிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என நோர்வே அகதிகள் சபையின் செயலாளர் நாயகம் தோமஸ் சி. ஆர்சர் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தத்திற்குப் பின்னர் நடந்த இந்த மோசமான தாக்குதலில் எத்தனை பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இந்த ஆண்டில் இதுவரை நடந்த வன்முறைகளில் இதுவரை 800 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையிலே மனிதாபிமான பணிகளில் ஈடுபடும் பெரியதொரு நிறுவனமான நோர்வே அகதிகள் சபை 170 பணியாளர்களுடன் நாட்டின் 7 இடங்களில் அலுவலகங்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

(த)

# ஆயுதம் கடத்தப்படுவதாகக் கூறி வினோ எம்.பியின் வாகனம் மறிப்பு

## மன்னாரில் சம்பவம்; தீவிரசோதனையின் பின் விடுவிப்பு

மன்னார், ஓக.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் நேற்றுமுன்தினம் காலை மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவரது வாகனத்தில் ஆயுதம் கடத்தப்படுவதாகத் தெரிவித்து படையினரும் பொலீஸாரும் இணைந்து அந்த வாகனத்தை இடைவழியில் மறித்துச் சோதனையிட்டனர்.

வவுனியா கணேசபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக மன்னாரிலிருந்து தமது வாகனத்தில் புறப்பட்டுச் சென்றார் வினோ எம்.பி. அவரோடு அவரது மெய்ப்பாதுகாவலர்களான பொலீஸாரும் கூடவே சென்றனர்.

மன்னார் வங்காலைச் சந்தியில் அவரது வாகனம் திடீரென வழிமறிக்கப்பட்டது. பெருமளவு பொலீஸாரும் படையினரும் வாகனத்தைச் சுற்றிவளைத்து துருவித்துருவிச் சோதனையிட்டனர்.

குறித்த வாகனத்தில் ஆயுதம் கடத்தப்படுவதாக தமக்குத் தகவல் கிடைத்தது என்று படையினரும் பொலீஸாரும் வினோ எம்.பியிடம் கூறினர்.

சுமார் ஒரு மணிநேர தீவிரசோதனையின் பின்னர் வாகனத்தைத் தொடர்ந்து செல்லப் படையினர் அனுமதித்தனர்.

பின்னர் பயணத்தைத் தொடர்ந்த வினோ எம்.பியின் வாகனம், முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மறிக்கப்பட்டு சுமார் 25 நிமிடங்கள் சோதனையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்ற குறித்த வாகனம் முருங்கன் [illegible] பகுதியிலுள்ள சோதனைச் சாவடியில் மீண்டும் மறிக்கப்பட்டு சுமார் 50 நிமிடங்கள் சோதனையிடப்பட்டது.

அங்கும் அந்த வாகனத்தில் ஆயுதம் கடத்தப்படுவதாகத் தமக்குத் தகவல் கிடைத்தது என்றே படையினரும், பொலீஸாரும் கூறினர்.

பொலீஸாரின் பாதுகாப்புடன் வந்த போதும் தமக்கு இத்தகைய அசௌகரியம் ஏற்படுத்தப்பட்டதையிட்டு வினோநோதராதலிங்கம் எம்.பி. கண்டனம் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு தாமதப்படுத்தப்பட்டதால் குறித்த நிகழ்விலும் தங்களால் கலந்து கொள்ள முடியாமல் போனததாக அவர் கூறினார்.

''நாடாளுமன்ற உறுப்பினரான என்னை அவமதிப்பதற்காக பொலீஸாரும், படையினரும் இணைந்து நடத்திய திட்டமிட்ட செயல் இது'' - என்றும் வினோ எம்.பி. காட்டமாகக்கூறினார்.

(த)

## யாழ். படைகளுக்கு புதிய தளபதி நியமனம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 11


யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவின் புதிய தளபதியாக பிரிகேடியர் மனோ பெரேரா நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவரை 51 ஆவது படைப் பிரிவுத் தளபதியாக இருந்த பிரிகேடியர் லெனாட் மார்க் யாழ். தென்மராட்சி வரணியிலுள்ள 52 ஆம் படைப் பிரிவு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
19 ★ 09 ★ 1949





மறைவு
04 ★ 08 ★ 2004

## அமரர் சின்னச்சாமி சுப்பையா
## (இரத்தினம்)

**(துர்க்கா விற்பனை நிலையம்)**

அன்போடு பண்போடு உறவாடி
அகிலம் போற்றிட வாழ்ந்தீர்
கட்டிய மனையாள் கதறியழுதிட
கட்டிய மனையாள் கதறி அழுதிட
கண்கண்ட குழந்தைகள் வாய்விட்டலற
கூடிய உறவுகள் உள்ளம் குமுறிட
இவ் உலகம்விட்டு எங்குதான் சென்றீர்
தேடியே அலைகின்றோம் தேற்றுவார் இன்றி
ஓடியே வந்திடப்பா ஒருமுறை உங்கள் வதனம் காண.

22A, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(57211) (84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வரிசை



**நூல்** : யாழ்.நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயச் சித்திரத் தேர்த் திருமலர்
**வெளியீடு:** ஆலய பரிபாலன சபை, திருப்பணிச்சபை

தேர்திருமலரில் தேர்முட்டியினுள் அம்பாளின் அழகிய நிலை கொண்ட உருவமும் கோயிலின் முன்புறத் தோற்றமும் புதிதாய மைந்த மணிமண்டபமும் முன் அட்டையை அலங்கரிக்க, பின்னட்டையில் கோயிலின் தோற்றமும் உள்ளன. அட்டை மூவண்ணத்தில் சிறப்பாக உள்ளது.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர், ஆலய மஹோற்சவ பிரதமகுரு, ஆலய பிரதம குரு ஆகியோரின் மரபுவழிப்பட்ட ஆசியுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. பத்துப் பெரியோரது வாழ்த்துரைகளும் தொடர்ந்து மலரை அணிசெய்கின்றன. திருப்பணிச் சபைப் பொருளாளர் க.சிவராசா அவர்களின் திருப்பணி வரலாறும் நன்றியுரையும் இடம்பெற்றுள்ளன.

மலரில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் (07), இ.குகதாசன் (07) கவிதைகளுட்பட 15 கவிஞரின் 29 கவிதைகளும் ஐந்து சிறு பாடல்களும் மலரில் உள்ளன. இருவர் கவிதைகளைத் தவிரப் பெரும்பாலானவை ஆலய மலர் (1971), அந்தாதிக்கீர்த்தனைகள் (1994) ஆகிய நூல்களிலிருந்து மீள் பிரசுரஞ் செய்யப்பட்ட கவிதைகளாகும்.

இம் மலரிலுள்ள பெரும்பாலான பாடல்கள் சிறப்புற்று விளங்குகின்றன.

''புலபுலெனப் புள்ளினங்கள் ஆர்த்தன; வொண் முரசம்
புவியெல்லாம் பரந்தொலித்த; தண்மலர்கள் பூத்த
இலைமலிந்த தண்டலை சூழ் நாயன்மார் கட்டில்
இராஜரா ஜேஸ்வரீ! பள்ளியெழுந் தருளே''

என வித்துவான் க.கி.நடராஜன் 'திருப் பள்ளியெழுச்சியிலும்,

''பெருமகளாம் பேய்ச்சியம்மை அருள்பா லித்தே
பேரருளாம் பேரின்பம் தன்னை ஈய
இரு நிலத்தில் நாயன்மார் காட்டில் மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்''

எனப் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் 'திருவூஞ்சல்' இலும் பாடுவது நோக்கத்தக்கது. இ.குகதாசன் பாடல்களும் திருப்புகழ் சந்தப் பாணியில் சிறப்பாக அமைந்துள்ளன.

மேலும் கவிஞர் கந்தவனம் திரு நல்லைக்குமரன், இளங்கவி பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர், வெள்ளையண்ணை, கா.இரகுநாதன், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்), அருட்கவி விநாசித்தம்பி, திருவாட்டி மகேஸ்வரி இராசேந்திரம், வெ.சிவசம்பு, நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன், கவிஞர் சேந்தன் ஆகியோரது இறைமணம் கமழும் மரபுக் கவிதைகள் இடம் மலருக்குச் சிறப்பைத் தருகின்றன.

மலரில் ஒன்பது கட்டுரைகள் அறிவியல் அணுகுமுறையினூடு சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. உயர்தர வகுப்புகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயில்வோருக்குப் பயனுள்ளவை இவை. இவை பெரும்பாலும் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் பொது வரலாற்றுப் பின்னணியில் உலகிலும் ஈழத்திலும் சக்கி வழிபாட்டின் அறாத் தொடர்பினை ஆராய்ந்து கூறுவனவாகும்.

தொல்லியற் சான்றுகளினூடாக ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டுத் தொன்மையினைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும், இலக்கிய ஆதாரங்களை முன்னிறுத்தி அன்னை வழிபாட்டுச் சொல்நெறியைத் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், சக்தி வழிபாடு பற்றிச் சுருக்கமாக சோ.தர்மகுலசிங்கமும், ஈழத்து அம்மன் ஆலயங்கள் பற்றிய வரலாற்றுப் பார்வையினூடு யஜ, கண்ணகி, காளி மரபுகளை வெளிக்காட்டும் விதமாக பேராசிரியர் செ.கிருஸ்ணராசாவும் தமது கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

மேலும், இந்துப் பண்பாட்டின் அடித்தளத்தில் நின்று மஹோற்சவ காலச் சடங்களுக்குத் தெளிவு விளக்கத்தினைப் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ணஐயரின் கட்டுரை தந்துள்ளது. பேராசியர் அ.சண்முகதாஸ் அவர்களின் ''தமிழ் இலக்கியத்தில் தேர்'' என்னும் கட்டுரையானது, சங்ககாலம் முதல் தற்காலத்து ஈழத்தின் மஹாகவிக் காலம் வரையுள்ள இலக்கியங்களிலிருந்து 'தேர்' பற்றிய செய்திகளைத் தக்க ஆதாரங்களுடன் தருவதாகக் காணப்படுகின்றது. அத்துடன் ''இரதோற்சவத்தின் சிறப்பு'' (பிரம்ஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள்), ''சரீரத்தின் வடிவமே சித்திரத்தேராகும்'' (திரு.செ.பத்மநாதன்), ''தேரோட்டம் வாழ்வின் நீரோட்டம்'' (சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவ குருக்கள்) ஆகிய கட்டுரைகள் தேர், தேரோட்டம் பற்றிய ஆன்மீகத் தத்துவக் கட்டுரைகளை சுவைபட எடுத்தியம்புகின்றன.

இந்தச் ''சித்திரத்தேர் திருமலர்'' முக்கிய ஆவண நூலாகவும் சமய நூலாகவும் பண்பாட்டு நூலாகவும் இலக்கிய நூலாகவும் பன்முகப் பரிமாணங்களை கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மலரினைச் சைவத் தமிழ் அபிமானிகள் பெற்றுப் பயனடைய வேண்டும்.

*கலாநிதி, கலைமாமணி செ.திருநாவுக்கரசு*



**நூல்** : முட்புதரில் பூத்த புது மலர் *(சிறுகதைகள்)*
**ஆசிரியர்:** எஸ்.சி.இரத்தினசிங்கம் *(இந்துமதி)*
**வெளியீடு:** யாழ்.ராதவல்லி

கிறிஸ்தவ மத விழுமியங்களையும் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் வகையில் எஸ்.சி.இரத்தினசிங்கம் எழுதிய முட்புதரில் பூத்த புது மலர் என்னும் சிறுகதைத் தொகுதி அமைந்துள்ளது.

ஜெப வல்லமை, யார் பாவி, சளைக்காத ஜெபவீரர், விசுவாசக் கப்பல், கல்லறைப் பூக்கள், முட்புதரில் பூத்த புது மலர், மாசில்லாத அன்பு, ஊழியம் என்னும் 8 சிறுகதைகளை உள்ளடக்கியதாக இத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது.

சிறுவர்களையும் இளைஞர்களையும் ஆன்மீகத் துறையில் வழிநடத்தும் குருக்கள், ஆசிரியர்களுக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாகச் செயற்படும்.

நற் செய்தியில் போதிக்கப்படும் இறை கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் பொருள் பொதிந்ததாக ஒவ்வொரு சிறுகதையும் எழுதப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

யாழ்.ராதவல்லி வெளியீட்டகத்தின் கன்னி வெளியீடாக இந்நூல் அமைந்துள்ளமை இதன் மற்றுமோர் சிறப்பம்சமாகும்.

சமய சார்புடைய கதைகளாயினும் அவை நீதியையும், அறத்தையும், அன்பையும், சகோதரத்துவத்தையும் பிற நலனையும் போதிக்கின்றன.

**- சந்தியா.**

**நூல்** : அறுவடை பல்சுவை மாத இதழ்
**ஆசிரியர்:** ஜெ.பாரதி
**வெளியீடு:** தமிழ்ச் செய்தி மையம்



அறுவடை பல்சுவை மாத இதழ் வெளிவந்துள்ளது.

ரோபோ எதிர்காலத்தில் விளையாட்டுத் துறையில் பெரும் பணியாற்றலாம் என்று எதிர்வு கூறும் அழகிய முன் அட்டைப் படத்துடன் நூல் காட்சியளிக்கிறது.

'பாரதியும் வெண்ணிலாவும்' என்ற தலைப்புடன் விரியும் நூலின் உள்ளே... நிலவின் அழகை கவிஞர் பருகிப் பரவசப் பட்டதை அழகாக கட்டுரை ஆசிரியர் எமக்குத் தந்துள்ளார்.

'பழசும் புதிதும்' உரையாடல் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்க முற்பட்டுள்ளமையை காணலாம்.

இதுதவிர கண்ணீரின் மகிமை, புகழ் பெற்ற நூல்கள், சமையல் குறிப்புகள், மருத்துவ பாதுகாப்பு, தொண்டு நிறுவனப் பணிகள், அறிவியல் செய்திகள், உலோகம் பற்றிய குறிப்புகள் என பல்சுவை தரும் செய்திகள் நூலை அலங்கரிக்கின்றன.

ஆங்காங்கே கவிதைத் துளிகள், சிரிக்க வைக்கும் சிந்தனைத் துளிகள் என்பன புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு மேலும் சுவையூட்டுகின்றன.

தேடல் உள்ள வாசகர்களுக்கு விருந்தளிக்கும் வகையில் இந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது எனலாம்.

**எஸ்.தயா.**

# மக்கள் முகம்



இளவாலை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை பத்திநாதர் அகில இலங்கை சமாதான நிதிவானாக அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இளவலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவ ராகவும் இளவாலை வடக்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவராகவும் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க உபதலைவராகவும் பணி செய்து வருகிறார். சிறந்த சமய, சமூக சேவையாளராகவும் விளங்குகிறார். *(135)*

# மறைந்தார் மாண்பு

## நாடகம் இசைத்துறைகளுக்கு புத்துயிர் அளித்த கலைஞர்

பிள்ளை நாயகம் அவர்கள் மறைந்து இருபத்தைந்து வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் அவர் விட்டுச்சென்ற இசைக்கருவிகள் இன்றும் நாதம் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையார் அண்ணாவி வயிரவி போன்று இவரும் நாடகத்துறையிலும் இசைத்துறையிலும் அக்காலங்களில் சிறந்து விளங்கினார்.

கர்நாடக சங்கீதத்தைக் கற்பித்தலும் இசைக்கருவிகளை மீட்க கற்பித்தலும் இக்கருவிகளை உருவாக்குதலும் பழுதுபார்த்தலும் இவரது தொழிலாகவிருந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கலையகத்தில் மிருதங்க திருத்த வேலைகளையும் மேற்கொண்டார்.

''மணி ஐயர்'' என்று அழைக்கப்படும் நல்லைக் குருமணி அவர்கள் தனது கதாப்பிரசங்கத்திற்கு தேவையான சுருதிப் பெட்டியைப் பழுதுபார்ப்பதற்கு பிள்ளை நாயகத்திடம் வந்து போவது வழக்கமாய் இருந்தது. இன்னும் பிரபல இசைக் கலைஞர்களும் இவரிடம் வந் தார்கள்.

1928ஆம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று பிள்ளைநாயகம் வேறு கிராமத்திற்கு நாடகம் நடிப்பதற்காக தனது உறவினர்களான கலைஞர்களுடன் மாட்டுவண்டியில் புறப்பட்டவேளை, இவரது சகோதரியின் மகனாகிய நான்கு வயதுச் சிறுவன் தானும் போக அடம்பிடித்ததால் அடித்து தடுக்க முயன்று மனம் இரங்கி சிறுவனை தம்முடன் ஏற்றிச் சென்றுள்ளார். அச்சிறுவன் தான் பிற்காலத்தில் கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து என பிரபல்யம் பெற்றவர். நடிகமணி மாமனாரிடம் ஹார்மோனியம், மிருதங்கம் முதலிய வாத்தியங்களை இசைக்க கற்றுக்கொண்டார். அத்துடன் கர்நாடக சங்கீதத்தையும் அவரிடம் கற்றுக்கொண்டு பின்னர் இந்தியாவிலும் மேற்கொண்டார்.

நடிகமணியின் சகோதரர் அமரர் வி.வி.காசிநாதன் அவர்களும் மாமனார் பிள்ளை நாயகத்திடம் மிருதங்கக் கலையைக் கற்று சிறந்த மிருதங்க வித்துவான் ஆகினார்.

பிள்ளைநாயகம் அவர்கள் தனது புத்திரர்களையும் கலை உலகில் பிரவேசிக்க வைத்துள்ளார். இவரது மூத்த புதல்வர் திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், நகரசபை அலுவலகம் - நாவலப்பிட்டி) சிறந்த மிருதங்க வித்துவான் ஆவார். இளைய புதல்வர் வரதராஜன் அவர்கள் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி - கிளிநொச்சி ) நாடகக் கலைஞராகவும் இசைக் கலைஞராகவும் விளங்குகின்றார். இளையபுதல்வி திருமதி காந்தாமணி நாடகங்களில் நடித்துள்ளார்.

கலைஞர்கள் காலத்தால் அழியாதவர்கள். பிள்ளைநாயகம் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கி ஆண்டுகள் பல கடந்தாலும் அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

**நடிகமணி வைரமுத்து வஸந்த கான சபையினர், காங்கேசன்துறை.**

# மக்கள் சேவையில்

குருநகர்,ஓக.12

யாழ்.கொட்டடி புனித யோசவ் வாஸ் யாத்திரைத் தலத்தின் புதிய பரிபாலகராக வண. பிதா எஸ்.ஏ.றொஷான் அடிகளார் யாழ்.ஆயரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் செயலாளராக இறைபணியாற்றி வருகிறார்.

இவ் ஆலயத்தின் பரிபாலகராக இதுவரை கடமையாற்றிய வண. பிதா யோ.ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளமையால் இந்நியமனம் ஆயரால் வழங்கப்பட்டுள்ளது. (204-51)

* * *

தென்மராட்சி,ஓக.12

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளராக ச.யோகராசா கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சங்கத்தில் முன்னர் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய சோ.ஸ்ரீதரன் தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிய ச.யோகராசா சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (204-117)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.12

தென்மராட்சி கல்வி வலயத்தில் நிறைவேற்று முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக பிள்ளையினார் முத்துலிங்கம் கடமையாற்றிவருகிறார்.

இவர் முன்னர் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வந்தார். (204-190)



*தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து முப்பது வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிச் சென்ற கணக்குப் பதிவாளர் எஸ்.கணபதிப்பிள்ளையை கௌரவிக்கும் பிரிவுபசார விழா அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.*

*நிகழ்வில் எஸ்.கணபதிப்பிள்ளைக்கு சங்கத் தலைவர் வே.விநாயகமூர்த்தி மலர்மாலை அணிவிப்பதையும் அருகில் சங்க பொதுமுகாமையாளர் எஸ்.தேவகுமார், ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் க.நல்லதம்பி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

*(படம்: அரியாலைச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பலப்பிட்டிக் குண்டுவெடிப்பு; தமிழ்த் தம்பதியர் தடுத்துவைப்பு

கொழும்பு, ஓக. 12

ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கிய பிரமுகரும், அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். சிவதாசனின் வானில் குண்டுவெடித்தமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தமிழ்த் தம்பதியர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு, பம்பலப்பிட்டி, டிக்மன்ஸ் வீதி - மிலாகிரி அவனியுவில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சிவதாசன் பயணம் செய்த வானில் குண்டு வெடித்தது. அதில் மூவர் பலியாகினர். சிவதாசன் உட்பட 8 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகப் பலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பதுளையைச் சேர்ந்த தமிழ்த் தம்பதியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து முக்கிய தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க)

## காத்தான்குடியில் இருவர் காயம்

மட்டக்களப்பு-காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள பொதுச்சந்தையில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவரும் சிவிலியனும் காயமடைந்தனர்.

ரணசிங்க (வயது - 36) என்ற பொலிஸ் அலுவலரும் அட்துல் லத்தீப் (வயது - 35) என்ற முஸ்லிம் நபருமே இச்சம்பவத்தில் காயமடைந்தனர். இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (க)

## காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

கரவெட்டி,ஓக.12

வல்வை சிதம்பராக் கல்லூரிக்கு அருகில் உள்ள இராணுவ முகாமைச் சுற்றி உயரமான மண் அணை வேலி அமைத்துள்ளதால் மாணவர்களும் அப்பிரதான வீதியால் செல்லும் மக்களும் பெரும் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

வல்வை சிதம்பரக் கல்லூரிக்கு முன்பாக உள்ள பிரதான வீதியான பருத்தித்துறை காங்கேசன்துறை வீதியின் கடற்பக்கமாக உள்ள இராணுவ முகாமைச் சுற்றி உயரமாக புதிய மண் அணையை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

மேலும் வல்வையின் கடற்கரையோரக் காவலரண்களைச் சூழவும் மண் அணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக வல்வை மக்கள் பெரும் அச்சமடைவதாகத் தெரிவிக்கின்றனர்.(203-70)

## மணற்காட்டு தொழிலாளருக்கு உதவிகளில்லை

கரவெட்டி,ஓக.12

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மணற்காட்டு தொழிலாளர்கள் இதுவரை எவ்வித உதவியுமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிப்புற்ற தொழிலாளர்களுள் தையல் வேலை செய்தவர்கள் 12 பேர், வர்த்தக நிலையங்கள் வைத்திருந்தவர்கள் 10 பேர், மின் வியாபாரம் செய்தவர்கள் 20 பேர், சிறுகட்டுமரத்தில் மீன்பிடித் தொழில் செய்தவர்கள் 50பேர் ஆகியோர் அடங்குர். இவர்களுக்கு இதுவரை எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை என பாதிப் புற்ற தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து இவர்களின் சுய தொழிலுக்கான உதவிகளை வழங்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (203-70)

# பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் வான் தரித்தபோதே அதில் குண்டு பொருத்தப்பட்டது?

### சிவதாஸன் மீதான தாக்குதல் குறித்து விசாரணையாளர்கள் சந்தேகம்

ஈ.பி.டி.பி.யின் முக்கிய பிரமுகர் சிவதாஸன் பயணம் செய்த வாகனம் சமூக சேவைகள் அமைச்சு அலுவலகத்தில் வைத்து முழுவதுமாகச் சோதனையிடப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடங்கியது என்பது விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாகப் பொலிஸார் கூறியிருக்கின்றனர்.

சம்பவ தினத்தன்று மதியம் 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் அமைச்சு வளாகத்தில் அந்த வான் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிறகு சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னரே அது வெடித்துச் சிதறியிருக்கின்றது.

நேரம் கணித்து வெடிக்கக்கூடிய குண்டு ஒன்று வானின் டீசல் தாங்கியில் பொருத்தப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

அமைச்சு அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட அந்த வான் வழியில் பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் மாத்திரம் தரித்து நின்றது. அச்சமயத்திலேயே அதில் குண்டை எவரோ பொருத்தியிருக்கக் கூடும் என்று விசாரணையாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

மூத்த பிரமுகர் சிவதாஸனின் வாகனத்தில் குண்டு பொருத்தப்பட்ட விதம் ஈ.பி.டி.பியினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தக் குண்டுவெடிப்பு உள்வீட்டு வேலையாக இருக்கலாமா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர்களை இலக்கு வைத்து விடுதலைப் புலிகளின் போராளிகள் நீண்ட காலத்துக்கு முன்பே ஈ.பி.டி.பி. அமைப்பில் நுழைந்திருக்கலாம் என்றும் அவர்கள் உள்ளேயிருந்து இந்த வேலையைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி சில தகவல்கள் தெரிவித்தன. (க)

## சர்வமதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.12

சமாதானத்திற்கான அமைப்பின் சர்வமத பிரார்த்தனை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. (117)


இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

"மகா கினிராஜ தைலம்"

சகல விதமான வலிகள், எரிவு, நகர்வு, வீக்கம், அடிப்பட்ட காயம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, நரம்புவலி, தசைப்பிடிப்பு, நரிக்கால் வலி போன்ற வேதனைகளுக்கும் உடனடி நிவாரணம் கிடைக்கும். அதே சந்தர்ப்பத்தில் தலைவலி, தடிமன், தும்மல், காதுவலி, பல்வலி, மூக்கடைப்பு, இளைப்பு, சளிக்கட்டு போன்ற சந்தர்ப்பங்களில் பூசுவதற்கு சிறந்த சக்தி மிக்க தைலம்.




வெளிப்பூச்சுக்கு மட்டும்

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 021 222 2567

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO.231: REGNO A/L 250


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரன் அருணாதேவி



கோப்பாய் மத்தி கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் அருணாதேவி 08-08-2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை பரமேஸ்வரனின் (இ.போ.ச. கோண்டாவில்) பாசமிகு மனைவியும், செல்லத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை -சிவபாதமலர் தம்பதியரின் பாசமிகு மருமகளும், செல்வநாதன் (டென்மார்க்), விமலநாதன் (லண்டன்), வதனாதேவி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் புலேந்திரராஜா (லண்டன்), சாந்தரூபி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-08-2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
செ.பரமேஸ்வரன் (கணவர்).

(53225)(26.19.14)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 ✱ 01 ✱ 1953



உதிர்வு 04 ✱ 08 ✱ 2004

### அமரர் இராசா இராமச்சந்திரன்

அன்பென்றும் அரவணைப்பென்றும்
ஆசையாய் எம்மை வளர்த்து
பண்பென்றும் பண்பாடென்றும்
கல்வியென்றும் கட்டுப்பாடென்றும்
நாம் வளர நல்ல அப்பாவாய்
இல்லற வாழ்வில் நல்ல கணவனாய்
நாம் அனைவரும் வாழ வழிஅமைத்து
எமது நெஞ்சில் இடம்பிடித்து
எம்மையெல்லாம் விட்டுச்சென்று
இரண்டுவருடங்கள் ஆகியும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.

தம்பாலை,
அச்சுவேலி.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

(53220)(26.19.14)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

12.08.2006




பிரஷாந்தன் - ஸ்ரீரஜனி
தம்பதியரின் செல்வப்புதல்வி

### மானஷி

தனது முதலாவது பிறந்தினத்தை இன்று (12.08.2006) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, மாமா, அத்தை, பெரியப்பா , பெரியம்மா, சித்தப்பா, அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அம்மப்பா
(எஸ்.கே.இலங்காபதி - மல்லாகம்).

(53217)(24.14.19.26)


QUEEN HERBAL BEAUTY CARE
(குயின் கேபல் பியூட்டி கெயார்)

* Facials- பேசியல் (Clean up.Normal Facial.Bleach with Facial. Natural Fruit Facial.Silver Facial.Gold Facial)
* Eye Brow Threading
* Make Up
* Bridle Dressing (மணப்பெண் அலங்காரம்)
* Hair Straightening
* Re Bonding
* Pimple Treatment
* Hair Treatment
* Perms
* Hair Styles
* Hair Dye-Permanent Black
* Cut Shampoo Set
* Waxing
* Pedicure. Manicure
* Wedding Cake

(Only Saturday & Sunday)



சண்முகம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
T.P:-0776145305.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Graphic துறையில் புதிய வடிவமைப்புக்களுடன் ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறி

**Diploma in Graphic Designing**

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

**Diploma in Video Mixing**

Course Contents
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Introduction to 3D Albam

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 14/08/2006 - 8.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தின் தலைநகர் திருமலை என்பது சிங்கள அரசுக்கு களத்தில் நிருபணம்

## புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான்



திருகோணமலை தமிழீழத்தின் தலை நகரமென்பது பேச்சளவில் இல்லாமல் இன்று அது ஒரு களநிலை யதார்த்தமாக சிங்கள அரசுக்கு உணர்த்தப்படுகின்ற வீரம்மிக்க போராட்டக் களமாக மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான்.

லெப்.கேணல் குஞ்சனின் வீரவணக்க நிகழ்வில் கலந்தகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

திருகோணமலையை வெற்றிகொள்வதிலேயே தமிழீழத்தின் வெற்றி தங்கியுள்ளது.

தமிழீழத்தின் விடுதலைக்காக 18ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் ஆகுதியாகியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்நிலை வளர்ச்சிக்கும் உலகத் தமிழர்களின் வீரத்தின் வெளிப்பாட்டிற்கும் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர்.

மாவீரர்களின் பொதுப்பாடான அடையாளத்துடன் குஞ்சன் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக நாம் அவரை நினைவு கூர வேண்டி நிற்கின்றோம். தமிழீழத்தின் தலைநகரமான திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேரூன்றலுக்கும் வளர்ச்சிக்கும் காரணமான அடித்தளத்தை இட்டதில் குஞ்சன் முக்கியமானவர்.

திருகோணமலை தமிழீழத்தின் தலைநகரம் என்பது பேச்சளவில் இல்லாமல் இன்று அது ஒரு களநிலை யதார்த்தமாக சிங்கள அரசுக்கு உணர்த்தப்படுகின்றது-என்றார். (203)

# சிறுகதைத் தொகுதி வெளியீடு இன்று

கிளிநொச்சி, ஒக.12

நா.யோகேந்திரநாதனின் ''தொலை நோக்கி'' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடை[illegible].

புலிகளின் குரல் நிறுவன வெளியீட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

(203)

# வன்னிப் பகுதிகளில் பேரீந்து மரங்கள்



கிளிநொச்சி, ஒக.12

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம் இடதுகரையில் சுமார் 20 வயதுடைய பேரீச்சமரம் ஒன்று நன்றாக காய்த்து வருகிறது.

இதனை பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றார்கள். இப்பேரிச்சமரம் தனியாகவே நிற்கின்றது. இது வருடத்தில் ஒருதடவையே காய்த்துப் பழுக்கின்றது.

ஆனால் பேரீச்சம்பழத்தை பெறமுடியாது காய்முற்றிப் பழுப்பதற்கிடையில் பறவைகள் காய்களை கொத்தி உண்கின்றன.

பேரீந்து நிற்கும் காணியில் ஆட்கள் குடியில்லாத காரணத்தினால் பராமரிப்பின்றி பேரீந்து நிற்கின்ற போதிலும் நன்றாக காய்த்து வருகின்றது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் பேரீச்ச மரங்கள் நிற்கின்றன. இதிலும் சில நன்றாக காய்த்து வருகின்றன. அதுவும் முற்றி பழுக்க முன்னர் பறவைகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றதால் முழுமையாகப் பேரீச்சம் பழங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாது இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-307)

# அனர்த்தகால முதலுதவிச் சேவையில் வவுனியா வடக்கில் பயிற்சிவழங்கல்

புளியங்குளம், ஒக.12

வவுனியா வடக்குப் பகுதிகளில் 895 பேருக்கு தமிழீழ சுகாதாரசேவையினரால் போர்க்காலத்தில் உடனடி முதலுதவிகளை வழங்குவதற்குகான பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன.

பொதுமக்கள் 110பேருக்கும், நிறுவனங்களைச் சேர்ந்த 400பணியாளர்களுக்கும் 271மாணவர்களுக்குமே பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. போர் மற்றும் அனர்த்தகாலங்களில் ஏற்படக்கூடிய இழப்புகளைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடாகத் தமிழீழ சுகாதார சேவையினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இப்பயிற்சிகளை தமிழீழ சுகாதார சேவையினரின் வவுனியா வடக்குப் பிரதேச இணைப்பாளர் த.தமிழ்வேந்தன், உணவு, மருந்து கட்டுப்பாட்டுப் பிரிவு இணைப்பாளர் த.காண்டீபன், பாலமோட்டை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் பண்பரசன் ஆகியோர் வழங்கினர்.

முதலுதவிப் பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடைமுறைகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-355)

# சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு மீண்டும் மக்கள் பாவனைக்கு

பரந்தன்,ஒக.12

சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுகளுடன் இவை மக்கள் பாவனையிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. இதனையே மீண்டும் மக்கள் மத்தியில் அறிமுகம் செய்துள்ளனர்.

மீண்டும் சிக்கன அடுப்பை அறிமுகம் செய்தமைக்கு கூறப்படும் அடிப்படைக் காரணங்களாவன:-

* விலைவாசி ஏற்றத்தினால் சாதாரண கூலியாட்களின் நாட்கூலியினளவு அதிகரித்த நிலையில் விறகின் விலையும் அதிகரித்துள்ளது.
* சிறிது சிறிதாக வன வளத்தை அழிக்கும் நிலை.
* சாதாரண அடுப்பின் பாவனை மூலம் நெஞ்சிற்கு வரும் நெருப்பின் தாக்கத்தினால் ப்ல்வேறு நோய்களுக்கும் ஆளாகும் குடும்பப் பெண்கள்.
* சிக்கன அடுப்பின்மூலம் வெப்பத் தாக்குதலுக்கு ஆளாகாத தன்மை.
* சிக்கன அடுப்பின் மூலம் மேற்கொள்ளும் விரைவான சமையல்.
* சிக்கன அடுப்பின் மூலம் விறகில் ஏற்படும் சிக்கனமும் செலவாகும் பணம் விரயமாகாத தன்மையும்.

எனவே, தத்தமது வீடுகளில் சிக்கன இரட்டைச்சூட்டடுப்பினைக் கட்டிக்கொள்ள விரும்பும் பாவனையாளர்கள் இரணைமடுவிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடுவப் பணியகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதமூலமோ தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகொள்வோருக்குத் தேவைப்படும் இடங்களுக்குச் சென்று அடுப்பு அமைத்துக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

(203-352)

# விரைவில் மின்சாரம் வழங்குமாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,ஒக.12

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்கு மின்சாரம் வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் முல்லைத்தீவு நகருக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதுக்குடியிருப்பு நகரப் பகுதிக்கு இலங்கை மின்சார சபையினரால் மின்சாரம் வழங்கப்படுகின்றது.

ஆனால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்கு எவரும் மின்சாரம் வழங்க முன்வரவில்லை. இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடம் பலதடவை கோரிக்கைகள் விடுக்கப்பட்டன எனவும் -

இதுவரை எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லையென்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் இன்மையால் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த கைத்தொழில் முயற்சிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் இலங்கை மின்சார சபையினரால் மின்சாரம் வழங்கப்பட்டதென்றும் -

போர்க்காலச் சூழலின்போது மின்கம்பங்கள் இருந்த இடமே தெரியாது அழிவடைந்துவிட்டன எனவும் - மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேசங்களில் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரம் வழங்கப்படுவதுபோல் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-353)

# மாணவர் அமைப்பு குழுவினரின் கலந்துரையாடல்

பரந்தன், ஒக.12

வட்டக்கச்சிப் பிரதேச மாணவர் அமைப்புக் குழுக்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மண்டபத்தில் அந்தப் பிரதேசத்தின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் அறிவுக்கனியின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளைப் பாடசாலை அதிபர் எஸ்.பாலகிருஸ்ணன், வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர் அமைப்புக் குழுப் பொறுப்பாசியர் அகிலன், வட்டக்கச்சிப் பிரதேச சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் சாகியன், தமிழீழ மாணவர் அமைப்பு கல்வி அபிவிருத்திப் பொறுப்பாளர் சஞ்சீவி , இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர் அமைப்புக் குழுத் தலைவர் நாகேந்திரா ஆகியோர் வழங்கினர்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர் அமைப்புக் குழு, இராமநாதபுரம் மகாவித்தியாலய அமைப்புக் குழு, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை மாணவர் அமைப்புக் குழு ஆகிய மூன்று குழுக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், பொறுப்பாசிரியர்கள் மற்றும் வலயப் பொறுப்பளார்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (203-352)

## வன்னிச் செய்திகள்

# ஒட்டுசுட்டானிலுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுவது எப்போது?

### செய்திக் கட்டுரை

**இ.தனபாலசிங்கம்**
**ஒட்டுசுட்டான் செய்தியாளர்**

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளன. இதனால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இச்சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் எப்போது திருத்தப்படுமென கற்சிலைமடு கமக்கார அமைப்புத் தலைவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கமக்கார அமைப்புத் தலைவர் தெரிவித்துள்ளதாவது:-

ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தித் திணைக்களதிற்குட்பட்ட சுமார் 39 குளங்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது உள்ளன. இதில் ஒருசில குளங்களே புனரமைக்கப்பட்டன. பெரும் கருவேப்பமுறிப்புக்குளம், கற்சிலைமடு பெரியகுளம் கூடுதலான பயிர்ச்செய்கை நிலங்களைக் கொண்டுள்ள போதிலும் புனரமைக்கப்படாது குளத்தினுள் புற்கள் வளர்ந்துள்ளன. இதனால் போதிய நீரைத் தேக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறைந்த மழைவீழ்ச்சியுள்ள காலங்களில் தேவையான நீரைத் தேக்கமுடியாத நிலையில் குளங்கள் உள்ளன. காலப்போக்கில் இக்குளங்கள் தரைமட்டமாகக் கூடிய ஏதுநிலை காணப்படுகிறது. இக்குளங்கள் உடன் புனரமைக்கப்படவேண்டும் முக்கியமான அழியும் நிலையில் காணப்படுகின்ற குளங்கள் திருத்தப்படவேண்டும்.

எமது பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. கூழாமுறிப்பு ஓட்டுத்தொழிற்சாலை மந்தகதியில் உள்ளது. இதேபோல் தும்புப் பண்ணை, புல் வளர்ப்பு போன்றவையும் அறவே இல்லாது மறைந்துள்ளன. மின்சார வசதி ஏற்படுத்தப்படும் மின்பிறப்பாக்கி கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டதே ஒழிய எதுவும் நடக்கவில்லை.

பாரிய நீர்ப்பாசனக்குளமான முத்துஐயன் கட்டு குளத்தின் வாய்க்கால்கள் சுமார் 15 வருடங்களாகியும் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஏந்து நீர்ப்பாசனத்திட்டம், பெண்கள் குடியேற்றத் திட்டம், படித்த வாலிபர் திட்டம் போன்ற பல திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதிலும் அவை தற்போது இருக்குமிடமே தெரியாது மறைந்துவிட்டன.

எமது பிரதேச அபிவிருத்திகள் யாவும் முடக்கப்பட்டே வருகின்றன. அபிவிருத்தி குன்றிவரும் வேளை மக்கள் தமது காணிகளை விடுத்து வேறு இடம் செல்கின்றனர். காணிகள் தரிசாகி தரிசு காடாகி வருகின்றது. நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்தவரை ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது. அத்துடன் உரிய நிதியும் ஒதுக்கப்படுவதில்லை.

எமது பிரதேசம் அபிவிருத்திப் பாதைக்கு திரும்ப வேண்டும், தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும், மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும், மருத்துவ நிலையங்களையும் ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அமைத்தால் மட்டும் போதாது தேவையான மருத்துவர்களை நியமிக்க வேண்டும். செயற்பட்டுவந்த தொழிற்சாலைகள் மீண்டும் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். எமது மக்களின் வறுமைநிலை, வேலையில்லாப் பிரச்சினை தீர வழி அமைக்கவேண்டும் - என்றார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மரவள்ளிக்கிழங்கு சீவும் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.குணரத்தினம் மீசாலை மேற்கு, மீசாலை (கேணியடி வீதி,) T.P. 0775194777 (சி-50250)

Sony 21' Trinitron T.V., C.D யுடன் சேர்ந்த கசற் ரேடியோவும், போட்டோசொப், வீடியோ எடிட்டிங் செய்வதற்கேற்ற வகையில் நல்ல நிலையில் உள்ள கொம்பியூட்டர், ஸ்கானர், U.P.S என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஈசன், 0776013639 ஆறுமுகம் வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு. (53248)

LH - 30, 62-xxxx தொடர் இலக்கமுடைய தற்போது பாடசாலை சேவையில் ஈடுபடும் ஹயஸ் வானும், நல்ல நிலையில் உள்ள JC ஆங்கில தொடர் இலக்கமுடைய Honda MD-90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஈசன் 0776013639 ஆறுமுகம் வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு. (50248)

## வீடு விற்பனைக்கு

பிறவுண்வீதி, கொக்குவில் கிழக்கில் 4 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மற்றும் 4 பரப்பு வெறும்காணியும் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: S.சிறி T.P. 0777111400. (53254)

## மணமகள் தேவை

U.K. யில் வசிக்கும் 25 வயது பொதுநிறமான மணமகனுக்கு U.K. யில் P.R உள்ளது. மணமகள் தேவை. M-1010 P.O. Box 2129 Colombo. (சி-50699)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன Self Drive வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) T.P. 021 222 9154, 0777593722 (52249)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறைதடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 14.08.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை,உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-50696)

## தொழிற்பயிற்சி

1.பிளாஸ்ரிக் எழுத்துக்கள் வடிவங்கள் வெட்டுதல்
2.பொலிமர் றபர் சீல் செய்தல்
3.போட்டோப் படப்பிடிப்பு

தொடர்பு: சனி, ஞாயிறு T.P.:0776939428

**யாழ்.தேவா கலையகம்**

வைத்தீஸ்வராச்சந்தி, 79, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.

(53245)(21.19.17)

## A/L பௌதிகவியல்/இணைந்த கணிதம்

பிரபல கல்லூரிகளில் பல வருடங்கள் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள்கள் உட்பட) 3000 இற்கும் மேற்பட்ட M.C.Q. வினாக்களுடன் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும். சிறந்த பெறுபேறுகளைப்பெற

T.P.: 0776648751

ஆசிரியர்: R.பாலசுப்பிரமணியம்
B.Sc.(Cey) Dip-in-Ed.
42/½, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(53258)(21.19.17)

# 40%

மார்க்கோனியின் கோல்டன் ஜூபிலியை முன்னிட்டு தமது கற்கைகளுக்கு 40 வீத கழிவு வழங்கப்படுகிறது. இது Aug 25th வரை (ஒரு வருடத்தில் ஒரு முறை)

- Dip in TV, Radio,VCD Repair - 1500/=
- Dip in Cellphone Repairs - 1200/=
- Dip in Electrical Wiring - 1200/=
- Dip in Computer Hardware - 1000/=
- Dip Computer Device Repair - 1200/=
- Cer in Electronics ( For all) - 750/=



மணிஓடர் மூலம் அனுப்பவும் (பதிவுத் தபால்) இடம் - Wellawatte Post Office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. மேலதிக தகவல்களுக்கு TP - 2 361 362., இல்லையேல் ரூ.5 ஒட்டப்பட்ட சுய கடித உறையை வைத்து அனுப்புங்கள்

Marconi Technical Institute, 410 - 2/1, Galle Road, Col- 06. 2361362

## Organ/Violin Notes

Organ, வயலின் Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான 220 சினிமாப் பாடல்களின் Notes, கேள்வி ஞானம் Key Board Exercise, Theory, ஆகியன விற்பனைக்குண்டு.

**சுரவீணா இசைமன்றம்**

131,கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.:0713055991,
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 M தெற்கே)

(21.45.15) (51512)

## தவறிவிட்டது

தா.திருவருள்ச்செல்வன் என்பவரது தேசிய அடையாள அட்டை (713065579V) சாவற்காட்டுக்கும் சுதுமலைக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் சிறிசுபா வெதுப்பகம், மதவடி, சுதுமலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (53244)

யேசுதாசன் அன்ரனி குயின்ரஸ் என்பவருடைய தே.அ.அ.(820025725V) தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் இல. 316, கௌரி அழகுமாடம், சிவன் கோயிலடி (K.K.S.Road), யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ or பின்வரும் தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளவும். T.P.No. 222 3227. (53080)

இ.தவனேஸ்வரன் என்பவரது தே. அ. அட்டை, விசேட அ.அட்டை என்பன வேலணைக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.No. 0779346521,0779905389(53080)

## விற்பனைக்கு

லண்டனிலிருந்து கொண்டுவந்த புத்தம் புதிய Sony - DVD / VCR RECEIVER HOME THEATRE SYSTEM விற்பனைக்குண்டு.
தொடர்புகள்: T.P. 0779505961 (53260)

## மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

**Diploma in Digital Video Production (DVP)**

(Introduction to Digital Video, Morph Sound Forge, Combustion, Premiere & Project)
காலம் : 3 மாதங்கள்

CSC Computer Education ISO 9000 : 2001 Certified Institution
Unit of Asian Business College
யாழ்ப்பாணம் - CSC
101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி,
021-222 8196

## மல்டிமீடியா பயிற்சிநெறிகள்

**Advanced Diploma in Digital Prepress (ADDP)**

(Pagemaker, Coreldraw, Photoshop Equation Editor, Language Computing & Project)
100% செய்முறை பயிற்சி காலம் : 3 மாதங்கள்

CSC Computer Education ISO 9000 : 2001 Certified Institution
Unit of Asian Business College
யாழ்ப்பாணம் - CSC
101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி,
021-222 8196

## நீங்கா நினைவில்
## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 - 11 - 1945
உதிர்வு 13 - 07 - 2006

### சின்னையா மருதமுத்துப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொதுச் சுகாதார, வெளிக்கள உத்தியோகத்தர்)

*குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*வாழ்ந்திட்ட எம் சுடரே!*
*மாதம் ஒன்று சென்றதையா*
*மாறவில்லை எம் துயரம்!*

*அவனிதனில் நாம் வாழ*
*வழிகாட்டி நின்றவரே*
*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன*
*அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!*

*பாசமழை பொழிந்து*
*பாரில் எமை வளர்த்தீர்கள்*
*பரிசமுடன் நாங்கள் தேட*
*பறந்து எங்கு சென்றீர்கள்?*

13.07.2006 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (12.08.2006) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை மத்தி, மானிப்பாய். மனைவி, மகள், பேரமக்கள்,
0777110270 மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(53257)(21.19.17)

# சிமெந்துடன் லொறி வெலிகந்தவில் கடத்தல்

ஏறாவூர், ஓக.12

திருகோணமலையிலிருந்து காத்தான்குடி நோக்கி சிமெந்துப் பக்கெற்றுகளை ஏற்றிவந்த கொள்கலன் லொறியொன்று கடந்த புதன்கிழமை மாலை வெலிகந்தப் பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் ஆயுதமுனையில் கடத்தப்பட்டுள்ளதாக வெலிகந்தப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசமான வெலிகந்த அசலபுர பகுதியில் வைத்தே இந்த லொறி வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லொறியைக் கடத்திக்கொண்டு காட்டுப்பிரதேச உள் வீதியொன்றுக்குக் கொண்டு சென்ற ஆயுத பாணிகள் லொறியிலிருந்து சுமார் 400 பக்கெற் சிமெந்துப் பைகளை அபகரித்துக் கொண்டு லொறியை விடுவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## அரையாண்டுப் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக் கழக கற்கைகள் வணிகபீட முதலாம் அரையாண்டு பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளன.

பீடத்தின் இரண்டாம், மூன்றாம்வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமையும் நான்காம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

அனுமதி அட்டைகளை பீட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (202)

## சமய சந்நிதி

வட்டுக்கோட்டை மேற்கு களவியோடை பிங்கள மோதக மாமரப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

பதின்னான்கு நாள்கள் விசேட உற்சவ விழாக்கள் நடைபெற்று இம்மாதம் 26ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி சிறப்புத் திருவிழாவாக நடைபெறும்.

## சொகுசுமிகு நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117

## சேவைநலன் பாராட்டு



### திருமதி மயூரவதனி ஆனந்தமகேஸ்வரன்

(பயிற்றப்பட்ட விஞ்ஞானம் S.L.T.S-I - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை)

எமது பாடசாலையில் ஆசிரியராக சிறப்புற இருபத்தாறு வருடங்களாகச் சேவையாற்றி இன்றுடன் 12.08.2006இல் ஓய்வுபெறும் எமது ஆசிரியரை மேலும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

(53236)(21.17.15)

# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி கந்தையா கதிரவேலு (ஆசிரியர்)

காரைநகர், பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேலு அவர்கள் 09.08.2006 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தம்மாவின் (ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னக்குட்டி கந்தையா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் ரவீந்திரன், ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுஷா, திருமகள் ஆகியோரின் அன்பு மாமனும் வைஷ்ணவியின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பரமநாதன் நாகம்மா, இராமநாதன் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரசரட்ணம், தர்மரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13.08.2006 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (53255)

தகவல்:
பிள்ளைகள்.

## யோசப் பற்றிக் (ராசா)



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கரிற்றல் லேனை வதிவிடமாகவும் கொண்ட யோசேப் பற்றிக் 10.08.2006 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் திரு. திருமதி யோசப் தம்பதியரின் அன்பு மகனும் றோஸ்மலர் (வேபி) அன்புக் கணவரும் சகாயராணி(ரதி), மேரிரவி (குமார்), ராதிகா(யான்சிமாலா), மேரிஸ்ரலின் (ஜீன்), மேரி டிவின்சன்(மில்ரன்), நளினா, மேரியான்(றொட்னி), மேரியூட் கபில் ரன்(ரெறன்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற துர்ராசா, காலஞ்சென்ற யுவக்கின் செபமாலைமுத்து, இராசாத்தி, வவா சிலுவதாஸ், தேவதாஸ், அலன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் டேவிற் இராக்கினியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து இன்று (12.08.2006) சனிக்கிழமை பி.ப 2.45 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

149/2, கரிற்றல்லேன்,
யாழ்ப்பாணம். (53256) (21.19.17)
T.P. 0779773888, 777110029

தகவல்:
றோஸ்மலர்
(வேபி - மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் விமானங்களைத் தகர்க்கும் சதி
# தக்கநேரத்தில் உளவுத்துறையால் முறியடிப்பு

## சந்தேகத்தின் பேரில் 21 பேர் கைது


தரித்து நிற்கும் விமானங்கள்

லண்டன்,ஓக.12

பிரிட்டன் - அமெரிக்கா இடையில் பயணிக்கும் 10 விமானங்களைத் தகர்க்கும் சதி தக்கநேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு பிரிட்டன் உளவு நிறுவனத்தால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது. சதியுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 21 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சதி முறியடிக்கப்பட்டதால் அந்த விமானங்களில் பயணம் செய்யவிருந்த ஆயிரக்கணக்கானோர் காப்பாற்றப்பட்டுள்ளனர். இதையடுத்து இந்தச் சதி எப்படித் தெரிந்தது. சதிகாரர்களை எப்படி அடையாளம் கண்டனர் என்பதைப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. விசாரணை தொடர்கிறது. கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் அவர்கள் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றவர்கள். அவர்களில் பலர் பாகிஸ்தானில் பிறந்தவர்கள் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனிலிருந்து அமெரிக்காவின் வாஷிங்டன், கலிபோர்னியா, நியூயோர்க் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் விமானங்கள் குறிவைக்கப்பட்டிருந்தன. இச்சதி வெளியானதும் விண்ணில் பறந்த விமானங்களைத் தவிர மற்ற விமானங்கள் அனைத்தையும் பிரிட்டிஷ் அரசு ரத்து செய்தது. உடனடியாக அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பிற நாடுகளுக்கும் எச்சரிக்கை விடப்பட்டது. பிரிட்டனின் எந்த ஊரிலிருந்தும் விமானங்கள் இயக்கப்படவில்லை. இதனால் விமான நிலையங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.


பயணிகள் துருவித் துருவிச் சோதனை

திரவ வெடிபொருள்களைக் கைப்பைகளில் எடுத்துச் சென்று விமானத்துக்குள் அவற்றைக் கலந்து விமானங்களை வெடிக்க வைக்க சதித்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

விமானப் பயணிகள் தங்களுடைய பாஸ்போர்ட், மருந்து- மாத்திரைகள், பணம், ரிக்கெட் வைத்துக் கொள்வதற்கான கைப்பை தவிர வேறு எதையும் விமானத்துக்குள் தங்களுடன் எடுத்துச்செல்லக்கூடாது என்று உலகம் பூராகவும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையும் வெளியில் தெரியும்படியான பிளாஸ்ரிக் பைகளில் எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கைக்குழந்தைகளுடன் செல்லும் தாய்மார்கள், குழந்தைக்கான திட, திரவ உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதாக இருந்தால் , அவற்றை விமானநிலைய பாதுகாப்பு அதிகாரிகள் எதிரில் சாப்பிட்டுக் காட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.பற்றரியால் இயங்கும் சாதனங்களை விமானத்துக்குள் கொண்டுவரவே கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சதியைக் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால் அமெரிக்காவில் 2001செப்ரெம்பர் 11இல் ஏற்பட்டதை விட பல மடங்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (202)

உலக அரங்கில்

## தற்கொலைத் தாக்குதலில் ஈராக்கில் 30 பேர் பலி

பக்தாத், ஓக.12

ஈராக்கின் நஜப் நகரத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 30பேர் பலியானார்கள்; 60பேர் படுகாயம் அடைந்தனர்.

ஷியா முஸ்லிம்களின் புனித ஸ்தலமான நஜப் நகரத்தில் உள்ள சந்தை ஒன்றில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான் எனக் கூறப்பட்டது.

இறந்தவர்களில் 22 பேர் ஆண்களும் 8 பேர் பெண்களும் ஆவர். காயம் அடைந்தவர்களில் 4 பேர் ஈரான் நாட்டவர்கள். (202)

# தமிழர் படுகொலைகளைத் தடுத்துநிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை



சென்னை,ஓக.12

தமிழர்களின் உணர்வுகள் வெடித்துக் கிளம்புவதற்கு முன்னதாக இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு சிங்கள இராணுவம் நடத்திவரும் மனிதப் படுகொலைகளைத் தடுக்கவேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையில் தமிழர்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளியுங்கள் என்று தொடர்ந்து இந்தியா வலியுறுத்திவரும் நிலையில் உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டு, சிங்கள அரசு வெறித் தாக்குதலை நடத்தி மனிதப் படுகொலை செய்துவருகிறது.

ஈழத்தமிழர் பகுதிகள் மீது கடும் தாக்குதலை மீண்டும் தொடங்கியுள்ள சிங்கள இராணுவம் ஈவு இரக்கமின்றி இரசாயனக் குண்டுகளை வீசியிருக்கின்றது.

இதில் அப்பாவித் தமிழர்கள் 100 பேர் இறந்துள்ளனர். 200 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர். குண்டுவீசப்பட்டதும் தீப்பிழம்புகளில் சிக்கி தமிழர்கள் உயிரோடு கருகி மாண்டுபோனதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

பகை நாடுகளுக்கிடையே நடக்கும் பெரும் போரில் கூட இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது என்பது சர்வதேச நெறிமுறையாகும். பகை நாடுகள் பின்பற்றும் இந்த நெறிமுறையைக் கூட சிங்கள அரசு கடைப்பிடிக்கவில்லை. சொந்த நாடு, சொந்தமக்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழ் ஈழத்தையும் ஈழ மக்களையும் முற்றிலும் அழித்தொழிக்கும் நோக்கத்துடன் இரசாயனக் குண்டுகளை வீசியிருக்கிறது. இதனை இந்தியா வன்மையாகக் கண்டிக்க வேண்டும். தமிழர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட முன்வரவேண்டும்.

இந்தியாவுக்கு அடிக்கடி வந்துபோகும் இலங்கைப் பிரதமரும் பிற அமைச்சர்களும் இங்கே பேசுவதும் உத்தரவாதம் அளிப்பதும் தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்துக்களாகத் தான் இருக்கின்றன - என்றுள்ளது. (202)

# தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் பாகிஸ்தானில் இயங்குவதாக தகவல்

பாகிஸ்தானில் பல பகுதிகளில் தீவிரவாத பயிற்சி முகாம்கள் தொடர்ந்து செயற்படுகின்றன. இந்தப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறுவோர் இந்தியாவுக்குள் ஊடுருவத் தொடர்ந்து முயற்சிக்கின்றனர் என ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

'ஹெரால்ட்' என்ற ஆங்கில பத்திரிகை இதுகுறித்து செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், கூறப்பட்டுள்ளதாவது:-

பாகிஸ்தான் ஆதரவு பெற்று இயங்கும் காஷ்மீர் தீவிரவாத குழுவான ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்புக்கு, பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் கார்கி ஹபிபுல்லா அருகே ஹிசாரி என்ற இடத்தில் தீவிரவாத பயிற்சி முகாம் உள்ளது. அங்கு 250 தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், பல தீவிரவாத பயிற்சி முகாம்களும் செயற்படுகின்றன. பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாத அமைப்புகளான லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, ஹர்கத்துல் முஜாகிதீன், அல்-பாதர் போன்றவை இந்த பயிற்சி முகாம்களை நடத்துகின்றன. (202)

# இந்திய -பங்களாதேஷ் எல்லையில் நடந்த தாக்குதலில் 2 பேர் உயிரிழப்பு!

அசாம்,ஓக.12

இந்திய - பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மூன்று சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து பங்களாதேஷ் படையினர் தாக்குதல் நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டனர்.

எல்லை பாதுகாப்பு படை வீரர்களுக்கும், பங்களாதேஷ் படையினருக்கும் தொடர்ந்து துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது. இந்திய - பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளதால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள மூன்று சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து, பங்களாதேஷ் படை வீரர்கள் கடந்த புதன் கிழமை இரவு சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் இரண்டு இந்தியப்பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், ஐந்து பேர் காயமடைந்தனர். இதற்கு எல்லைப் பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர். (202)

# தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் தயாரித்தல் இந்திய விண்வெளி மையத்திடம் ஒப்படைப்பு

புதுடில்லி,ஓக.12

ஐரோப்பிய வாடிக்கையாளர்களுக்காக 2 தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் தயாரிக்கும் வாய்ப்பு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு (ஐ.எஸ்.ஆர்ஓ) கிடைத்துள்ளது.

பிரதமர் அலுவலக இணை அமைச்சர் பிரிதிவிராஜ் சௌஹான் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

செயற்கைக்கேள்களைத் தயாரிக்கும் ஒப்பந்தம் ஐ.எஸ்.ஆர்.ஓ.வின் வர்த்தகப் பிரிவான 'ஆன்டிரிக்ஸ்' கூட்டுறவுத் திணைக்களம் மூலம் இந்நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது.

ஐரோப்பாவின் முன்னணி செயற்கைக்கோள் தயாரிப்பு நிறுவனமான 'ஈட்ஸ்' ஆஸ்டிரியத்துடன் இணைந்து செயற்கைக்கோள் தயாரித்து உலகச் சந்தையில் விற்பனை செய்யவும் ஆன்டிரின்ஸ் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ ரொக்கெட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரே ரொக்கெட்டைப் பலமுறை உபயோகப்படுத்தும் வகையில் தயாரிக்கும் முயற்சியை ஐ.எஸ்.ஆர்.ஓ. ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, இதற்கான ஆய்வுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன. இவ்வாறு ஒரே ரொக்கெட்டை பலமுறை பயன்படுத்துவதால் செயற்கைக்கோள் ஏவும் செலவு கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (202)

# முதல்வர் கருணாநிதியை இலக்கு வைத்து சுதந்திரதினத்தன்று மனித வெடிகுண்டு

## அநாமதேயக் கடிதம் மூலம் தெரிவிப்பு



சென்னை,ஓக.12

இந்திய சுதந்திர தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழக முதலமைச்சர் கருணாநிதியை இலக்கு வைத்துமனித வெடி குண்டுத் தாக்குதல் நடத்தப் போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அநாமதேயக் கடிதம் ஒன்றின் மூலம் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

கடந்த 3 நாள்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையர் அலுவலகத்திற்கு மர்மக் கடிதம் ஒன்று கிடைத்தது. அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பொலீஸ் எழுத்துத் தேர்வு நடந்தது. அந்தத் தேர்வு முடிவை ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிக்குள் வெளியிடவேண்டும். அவ்வாறு வெளியிடாவிட்டால் சுதந்திர தினத்தன்று சென்னை கோட்டையில் முதல் அமைச்சர் கருணாநிதி கொடி யேற்றும்போது மனித வெடிகுண்டாக மாறி தாக்குதல் நடத்துவோம் - என்றுள்ளது.

இதுபோன்று கடிதம் முதல் அமைச்சர் அலுவலகத்திற்கும் சில உயர் பொலீஸ் அதிகாரிகளுக்கும், பத்திரிகை அலுவலகங்களுக்கும் வந்தன.

அந்தக் கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டது, யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் இல்லாமல் மொட்டைக் கடிதம் போல் இருந்தது. கடிதம் எழுதியது யார்? என்று உளவுப் பொலீஸார் விசாரித்து வருகின்றார்கள்.

இந்த மிரட்டல் கடிதத்தாலும், ஏற்கனவே தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாலும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சென்னை கோட்டையில் பலத்த பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்த பொலீஸார் திட்டமிட்டுள்ளனர். (202)

# லஸ்கர்-இ-தொய்பா அமைப்பின் தலைவர் வீட்டுக் காவலில்

இஸ்லாமாபாத்,ஓக.12


பாகிஸ்தானிலுள்ள லஸ்கர் - இ- தொய்பா என்னும் தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் முகமது சயீத் நேற்றுமுன்தினம் முதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்துகொண்டு இந்தியாவில் வன்முறைச் சம்பவங்களைத் தூண்டிவிடுவதாக கருதப்படும் இயக்கங்களில் ஒன்றே லஸ்கர் - இ - தொய்பா.

ஒரு மாதத்துக்கு மட்டும் அவர் காவலில் வைக்கப்படுவார் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் நாளைமறுதினம் பாகிஸ்தானின் சுதந்திர தினத்தையொட்டி பேரணி நடத்துவதற்கு ஹபீஸுக்கு வழங்கப்பட்ட அனுமதியும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நெடுங்கேணி கிளைமோர் தாக்குதலில் மருத்துவப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்று கண்டப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதையும் இராணுவத்தினர், ஊழியர் ஒருவரை விசாரணை செய்வதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: சி.சுந்தரலிங்கம்)*

# பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்று கண்டனப் போராட்டம்

நெடுங்கேணி கிளைமோர்த் தாக்குதலில் மருத்துவப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் நேற்று கண்டனப் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் நண்பகல் 12 மணி வரை வைத்தியசாலையின் முன்பாக நடைபெற்றது. மேற்படி வைத்தியசாலையின் டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

நோயாளர்களைப் பாதிக்காத வகையில் இந்தக் கண்டனப் போராட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் -

✱ கொல்லாதே கொல்லாதே உயிர் காக்கும் ஊழியரைக் கொல்லாதே!

✱ ஆக்குவது ஆண்டவன்; அழிப்பது நீங்களா? என்ற சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியிருந்தனர்.

இதற்கிடையில் வைத்தியசாலை ஊழியர்களின் போராட்டம் நடைபெற்ற வேளை அப்பகுதியில் இராணுவத்தினரின் பிரசன்னம் இருந்தது என்றும் -

அவ்வேளை குறிப்பிட்ட போராட்டம் இராணுவத்துக்கோ அரசிற்கோ எதிரானது அல்ல என்றும் - சேவையின் போது உயிரிழந்த மருத்துவத்துறையினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் - வைத்தியசாலை ஊழியர்கள் படையினருக்குத் தெரிவித்தனர். இதனை அடுத்து சீருடையினர் அங்கிருந்து விலகிச் சென்றனர். (எ-70)


## VACANCIES
## University of Jaffna, Sri Lanka

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 23.08.2006.

**FACULTY OF ARTS**

**Assistant Lecturer** *(on contract) in Hindu civilization/psychology/Law/Fine Arts/Home Economics*

**FACULTY OF MEDICINE**

**Assistant Lecturer** *(on contract) in Biochemistry*

**PHYSICAL EDUCATION UNIT**

***Visiting Instructor In Sports***
*Badminton (Men)/Chess (Men)/Chess (Women)/Gymnastic (Men)/Karate (Men)/Table Tennis (Men) Tennis (Men).*

**Salary**
Assistant Lecturer (on Contract) Rs. 16870/- per month (fixed)
(Other allowances approved by University Grants Commission will also be paid).

Fees for Visiting Instructors Rs. 250/- per hour

***Note:* Candidates awaiting the final result of their Degree programme may also apply for the post of Assistant Lecturer (on Contract).**

Application forms ant other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, either in person or by post, on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/postal order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should use in separate application forms.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation.

Only applicants, short-listed based on their qualifications and eligibility will be called for an interview.

**REGISTRAR**
**2006.08.04**


# வடமராட்சியில் படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பு எனப் புகார்

யாழ்ப்பாணம்,ஓக.12

வடமராட்சிப் பகுதியில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இது தொடர்பில் படையினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, வடமராட்சிப் பகுதிக்குள் உள்நுழையும் வாகனங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள தடை முகாம்களில் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வல்லை, யார்க்கரு, முள்ளி, கலிகைச் சந்தி, வல்லிபுரக்கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களில் வாகனங்களில் வரும் பயணிகள் இறக்கப்பட்டு சோதனை செய்யப்படுகின்றனர்.

யாழ். - பருத்தித்துறை வீதியின் பல இடங்களிலும் வீதி வேகத்தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள சில பகுதிகளில் மாலை 6 மணிக்குப் பின்னர் வீடுகளைவிட்டு வெளியேற வேண்டாமெனக் கடந்த புதனன்று படைத்தரப்பினால் வீடுவீடாக அறிவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எக்காரணம் கொண்டும் மாலை 6 மணிக்குப் பின்னர் வீடுகளில் வெளியாள்கள் எவரையும் தங்கவைக்கவேண்டாமெனவும் படையினர் அறிவிப்பதாகக் கூறப்பட்டது.

படையினரின் இத்தகைய அறிவிப்புக்களால் பொதுமக்கள் பதற்றமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117-70)

# வெளிக்கள அலுவலர்களின் பாவனைக்கென பிரதேச செயலகங்களில் தனியான கட்டடம்

யாழ்ப்பாணம் ஓக.12

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் அலுவல்களுக்கென தனியான கட்டடங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் இந்தக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்வுள்ளன

முதற்கட்டமாக 10 பிரதேச செயலகங்களில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு கட்டடங்களும் சுமார் தலா 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும். ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், காரைநகர், கரவெட்டி ஆகிய பிரதேச செயலகங்களில் இந்த கட்டடங்கள் வெகு விரைவில் அமைக்கப்படும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர் ஆகியோர் போன்ற வெளிக்கள பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் இந்தக் கட்டடங்களில் இயங்கும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-13)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு ஆகிய பகுதிகளில் இன்று சனிக்கிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன என்றும் -

எனவே வளர்ப்புநாய்களை கட்டி வைக்குமாறும் -

வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

# சுகாதாரத் தொண்டர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.12

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தில் உள்ள சுகாதார நிறுவனங்களில் சேவைபுரியும் தொண்டர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)


## வீடு தேவை

**நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி அல்லது யாழ்.நகரை அண்டியுள்ள பிரதேசத்தில் வீடு அல்லது வீடு கட்டுவதற்கு உகந்த காணி தேவை. உரிமையாளர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.**

**T.P.: 077 6284648**


## மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி மழவராயர்

**(மகாஜன கல்லூரி - தெல்லிப்பழை,**
**J/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் முன்னை நாள் ஆசிரியர்)**



சிங்கப்பூரை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரும் புத்தூரை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி பத்மாவதி மழவராயர் நேற்று (11.08.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் மழவராயரின் (சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர் முன்னை நாள் ஆசிரியர்) பாசமிகு மனைவியும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலம் சென்றவர்களான லண்டன் வேலுப்பிள்ளை - பூரணாம்பாள் தம்பதியரின் மகளும் திருஞானசம்பந்தமூர்த்தி(லண்டன்), சிவகுமார் (பொறியியலாளர், கனடா), சத்தியபதி (லண்டன்) ஆகியோரதும் காலம் சென்றவர்களான திருநாவுக்கரசு, பகவதி, திலகவதி, மனோன்மணி ஆகியோரது சகோதரியும் பஞ்சசீலன் (வைத்தியர், கனடா), சிவசுப்பிரமணியம், தனலட்சுமி, அருள் நாயகம் (பொறியியலாளர், லண்டன்), காலம் சென்ற முருகையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.08.2006) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனக் கிரியைக்காக எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் வீதி,*
*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.*

தகவல்
**சு.மழவராயர்**
**(கணவர்)**

(53253)(15-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7655525 முதல் 7665000 வரை. சீட்டிழுப்பு இல. 261 திகதி 10-08-2006

### வெற்றி எண்கள்

1 2 9 5 9 6 — சுப்பர் எண் 26

ஜக்போட் பரிசு ரூ. 15,293,175/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 15,293,175/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 83 | 5,000/= | 415,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 826 | 500/= | 413,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8205 | 50/= | 410,250/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 81366 | 10/= | 813,660/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 80 | 1,000/= | 80,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 822 | 100/= | 82,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8135 | 20/= | 162,700/= |
| | | மொத்தம் ரூ. 3,871,810/= | |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 66,125/= | 529,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,400,810/=

ரூ. 66,125/- பெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 7663147-5-79 |
| கேகாலை | 7661018-2-00 |
| அம்பாறை | 7661497-4-25 |
| திருகோணமலை | 7659088-0-66 |
| இரத்தினபுரி | 7660280-2-36 |
| புத்தளம் | 7655995-2-08 |
| அநுராதபுரம் | 7661998-2-98 |
| மொணராகலை | 7662213-0-44 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 15,521,475/-

தொடர் இல. 6753120 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஆகஸ்ட் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


# கண்ணீர் அஞ்சலி



எமது வங்கியின் முன்னாள் முகாமையாளர்
வி.அருளானந்தம்
அவர்களின் அன்புச் சகோதரன்

## பேராசிரியர் வி.குணானந்தம்

(நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர், முன்னாள் சத்திரசிகிச்சைத் துறைத் தலைவர், மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.

(53268)
(18-11-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
27
04
1922



மறைவு
15
07
2006

## திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம்

கடந்த 15.07.2006 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டோர் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.08.2006) சனிக்கிழமை காலை 7 மணியளவில் வில்லூன்றிப் புனிதத் தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 14.08.2006 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 50773)(18-11-16)

தகவல்:
குடும்பத்தினர்.

# வவுனியாவில் வான் மோதி கோண்டவில் சிறுவன் பலி!

வவுனியா கோயில்குளம் முதலாம் ஒழுங்கையில் நேற்று பிற்பகல் 2 மணி யளவில் வான் மோதியதில் கோண்டாவிலைச் சேர்ந்த சிறுவன் பலியானார்.

கோண்டவிலைச் சொந்த இடமாகக் கொண்ட அம்பிகைபாகன் நிரூபன் (வயது-11) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

வவுனியாவில் தற்காலிகமாக வசித்து வந்த பிரஸ்தாப சிறுவன் நேற்று மதியம் பாடசாலையில் இருந்து ஓட்டோவில் வந்து வீட்டு வாசலில் இறங்கிய சமயம் எதிரே வந்த வான் ஒன்று மோதியதாகக் கூறப்பட்டது. (1-190)

# பிரித்தானிய கல்லூரியின் ஆங்கில தின விழா

யாழ்.பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியின் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த ஆங்கில தினமும் கலை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரித்தானிய வர்த்தகக் கல்லூரியின் நான்கு வளாகங்களில் சிற்றிவளாகம், மானிப்பாய் வளாக மாணவர்களின் ஆங்கில தினமும் கலைவிழாவும் காலை 8.30 முதல் 12.30 வரை யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளரும் இலங்கை தமிழாசிரியர் சங்க செயலாளருமாகிய த.பஞ்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றை தினம் பிற்பகல் ஒரு மணிமுதல் 5 மணிவரை கச்சேரி வளாகம், வட மராட்சி வளாக மாணவர்களின் ஆங்கில தினமும் கலை விழாவும் முன்னாள் யாழ் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் டி.ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. (1-202)


மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
டிஷ்யூம் புகழ் ஜீவா, கோபிகா, மோகன்லால், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த
அரண்
காட்சி நேரம்
10.30, 2.30, 6.30 மர் நேரம்

அறிவொளி -NALLUR
சிங்கள வகுப்புகள் ஆரம்பமாகின்றன
பிரபல ஆசிரியர் Mr.E.S. பியதாஸ
12.08.2006 சனி 4p.m.
(O/L பரீட்சார்த்திகள்முதல் அனைவருக்கும்)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இன்று சனிக்கிழமை
கட்டட நிதியுதவிக்காட்சி
சிவாஜி, பத்மினி நடித்த
தில்லானா மோகனாம்பாள்
காட்சி நேரம்:10.30,2.30

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
சம்திங் சம்திங்
உனக்கும் எனக்கும்
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(அ-47)


# முகமாலையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக தகவல்

யாழ்ப்பாணம், ஓக.12

முகமாலைச் சோதனை நிலையத்தில் வாகனம் ஒன்றில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன எனப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 8 மணியளவில் வாகனம் ஒன்றைச் சோதனை செய்ததாகவும் - அப்போது அதில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்றும் - படைத்தரப்பு தெரிவித்தது. இதன் காரணமாக முகமலை ஊடான போக்குவரத்து ஒரு மணி நேரம் தடைப்பட்டது. (1)

# 80 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்



## முருகேசு இராசையா

இன்று (12.08.2006) சனிக்கிழமை தனது 80 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் எமது தந்தையை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(53271) (18-11-16)

# யா/நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி

கீழ்க்காணும் பதவி நிலைகளுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.கணக்குப் பதிவாளர் (Accounts Clerk)
Computerised Accounting knowledge including Quick book, is essential
2.சித்திர ஆசிரியர்
3. ஆங்கில ஆசிரியர்

உங்கள் விண்ணப்பங்களை 23.08.2006 அன்று அல்லது அதற்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக அதிபர், நவீல்ட் பாடசாலை, கைதடி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.கடித உறையின் இடது பக்கத்தில் பதவி நிலையைக் குறிப்பிடவும்.

அதிபர்,
நவீல்ட் பாடசாலை.

(சி-50769) (18-11-16)

# University of Jaffna - SriLanka
# Faculty of Graduate Studies

Master of Arts in Public Administration
Academic Year 2006/07 - Batch I

## New Admission

Applications are invited for the above fee levying course.

**Admission Requirements:**
Admission is open to all graduates of any recognized university or those with any other qualifications and/or experience, which would be acceptable to the Senate of the University of Jaffna.

**Duration:**
One Year
Lectures will be conducted on Saturdays and Sundays.

**Medium:**
English

**Admission:**
Admission to the course will be made on the basis of an interview conducted by the Faculty of Graduate Studies, University of Jaffna.

Application forms and other details may be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelop 23x10 cm in size.

All completed applications forms should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely to reach on or before 10.09.2006

Registrar
10.08.2006

(சி-50768) (18-11-16)

# மரண அறிவித்தல்

## செல்வன் அம்பிகைபாகன் நிரூபன்

(ஆண்டு 6 - யாழ். இந்துக் கல்லூரி மாணவன்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நிரூபன் நேற்று (11.08.2006) வெள்ளிக்கிழமை வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகைபாகன் - மனோரஞ்சிதம் (மாலா) தம்பதியரின் ஏக புதல்வனும் சிந்துஜா, நிருஜா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பழனியாண்டவர் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.

(53270) (18-11-16)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமாலையில் படையினர் மீது புலிகளே முதலில் தாக்கினர்!

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் ரம்புக்வெல

கொழும்பு, ஓகஸ்ட் 12

முகமாலையில் புலிகளின் பகுதியை நோக்கி இராணுவத்தினர் எந்த முன்நகர்வையும் செய்யவில்லை. புலிகள்தான் இராணுவ முன்னரங்கு மீது முதலில் தாக்குதல் நடத்தினார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும், பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல.

இதுதொடர்பாக நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு செவ்வியளித்தார்.

**கேள்வி:-** முகமாலையில் புலிகளின் பகுதி மீது படையினர் தாக்குதல் நடத்தி முன்நகர்வை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறதே, உண்மையா?

**பதில்:-** இல்லை! முகமாலையில் படையினர் முன்நகர்வை மேற்கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று கூறுவது முற்றிலும் தவறானது. அங்கு எமது இராணுவ முன்னரங்கு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 4.45 மணிக்கு தாக்கப்பட்டது. எனவே இராணுவ முகாம்கள் இருக்கும் பகுதியைப் பாதுகாக்க நாங்கள் பதில் தாக்குதல் நடத்த வேண்டியதாயிற்று - என்றார் ரம்புக்வெல.

கேள்வி:- கிழக்கில் தமது பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனரே. இது உண்மையா?

பதில்:- இதுகுறித்து அவர்கள் இன்று முழுவதும் எங்கள் மீது குற்றஞ்சாட்டி வருகிறார்கள். மனித நேயச் செயல்களைச் செய்வதற்காக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் தேவை இருக்கின்ற பட்சத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குறிப்பிட்ட சில நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் கூடுதல் படைகளை அனுப்பிவிடாமல் இருக்கவேண்டும் என்பதே எங்களுக்குத் தேவை.

கேள்வி:- பல முனைகளில் இலங்கை அரச படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். உங்கள் இராணுவ நடவடிக்கையின் ஒட்டுமொத்தக் குறிக்கோள்தான் என்ன?

பதில்:- அவர்கள் சில பகுதிகளைத் தாக்கும்போது நாங்கள் எங்கள் பகுதிகளை பாதுகாக்கத்தான் வேண்டும்.

எங்கள் படைகள் மீது தாக்குதல் நடத்தப்படும்போது நாங்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது முதலாவது நோக்கம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதை முன்கூட்டியே தவிர்ப்பது. நிலைகளைப் பலப்படுத்துவது. இரண்டாவது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது.

கேள்வி:- பலமுனைகளில் தாக்குவதன் மூலம் நீங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுகிறீர்கள் என்று குற்றச்சாட்டு எழாதா?

பதில்:- ஒப்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் அந்த ஒப்பந்தங்களைவிட மனித உயிர்கள் முக்கியம். அவர்கள் தாக்குதல் நடத்தும்போது நாங்கள் பதில் தாக்குதல் நடத்த வேண்டியிருக்கிறது. அதாவது, அவர்கள் எங்கள் வீடுகள்வரை வந்து தாக்குதல் நடத்தும்வரை பொறுத்திருக்க முடியாது. அதுதான் இப்போதைய நிலைவரம். (த-12)

## பளைமீது ஷெல் வீச்சு சிறுமிகள் இருவர் காயம்

இராணுவத்தினர் நேற்றுமாலை பளைப் பகுதியை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிறுமிகள் இருவர் படுகாயம் அடைந்தனர்.

நவரட்ணம்-சர்மிளா (வயது-11), மினி (வயது-04) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (க)

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகர்கோவில், கிளாலி பிரதேசங்களிலும் பெரும் வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்பதாக வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். பூநகரிப் பிரதேசம் நோக்கியும் ஷெல்கள் ஏவப்பட்டன என்று ஒரு தகவல் தெரிவித்தது.

பளைப் பிரதேசத்தில் குண்டுகள் விழ்ந்து வெடிப்பதால் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் குழந்தை குட்டிகளையும் சுமந்து கொண்டு பரந்தன் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை -

முகமாலையை அண்டிய பகுதிகளில் இருந்தும், கொடிகாமம் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச மக்களும் இடம்பெயர் வதற்கு ஆயத்தமாகி வருகின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதிகளில் நேற்றிரவு பெரும் பதற்றம் காணப்பட்டது.

### வலிந்த தாக்குதல் என்கின்றனர் புலிகள்

முகமாலையில் அரசுப் படைகள் தங்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வலிந்த தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் மாவிலாறு ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அடுத்து வடக்கிலும், கிழக்கிலும் புதிய போர்முனையை அரசுப் படைகள் நேற்றுத் திறந்துள்ளன என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுற்பகல் மட்டக்களப்பில் தரவைப் பகுதியில் விமானத் தாக்குதல்களை நடத்திவிட்டு அங்கு ஒரு போர் முனையை அரசுப் படைகள் திறந்துள்ளன என்றும் -

பின்னர் நேற்றுப் பிற்பகல் முகமாலை வழியாக இரண்டாவது போர் முனையைப் படைகள் திறந்திருக்கின்றன என்றும் அவர் செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

முகமாலையில் முன்னேற முயற்சிக்கும் படையினரை எதிர்கொண்டு எதிர்ச் சமர் புரிவதற்காகப் பெரும் எண்ணிக்கையான போராளிகள் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்புடனும், தாயகத்தை மீட்கும் உத்வேகத்துடனும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் இளந்திரையன் தெரிவித்தார்.

### இராணுவம் மறுப்பு

அரசபடைகள் தமது பகுதிக்குள் வலிந்து முன்னகர்வினை மேற்கொள்வதாக விடுதலைப் புலிகள் கூறுவதை இராணுவம் மறுத்துள்ளது.

"இது விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் பொய்யான பரப்புரை" என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் உபாலி ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல சேதமடைந்தன. காடுகள் தீப்பற்றி எரிந்தன.உயிரிழப்புகள் தொடர்பான விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை -

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வன்னியில் கிளிநொச்சி வான்பரப்பில் விமானப்படையின் வேவு விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2.20 மணியளவில் நோட்டமிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து, நேற்றிரவு பத்து மணியளவில் யாழ்.பதில் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் லஷ்மன் கூரேயுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஊரடங்குச் சட்டம் பொலிஸாரால் பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

இன்று நிலைமையை அனுசரித்தே ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்வது குறித்து ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

இராணுவத்தின் பலாலித் தலைமையக உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போது தொலைபேசித் தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை.

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவுவரை உறுதிப்படுத்தவில்லை. பலாலித் தளம் மீதான வான் தாக்குதல் பற்றியும் அதனால் அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சேதங்கள், அழிவுகள் பற்றியும் அறிந்து கொள்வதற்காக இராணுவ உயர்மட்ட வட்டாரங்களோடு தொடர்பு கொண்டபோதும் எந்த விவரங்களையும் பெற முடியவில்லை என்று சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை -

இத் தாக்குதலில் இரு ஹெலிகொப்ரர்கள் சேதம் அடைந்திருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அரசுப் படைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக தங்களின் தரைப்படைகள் மற்றும் வான், கடற்படைகள் என அனைத்துப் படைப்பிரிவுகளையும் பயன் படுத்துவோம் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன் நேற்று கூறியிருந்ததை பல செய்தி நிறுவனங்களும் சுட்டிக்காட்டி இருந்தன. (ஐ)

# மாவிலாற்றில் நேற்று மோதல் நிலை தணிவு

## சிவிலியன் நிலைகள் மீதான தாக்குதல் தீவிரமும் குறைவு

கொழும்பு, ஓக.12

சர்ச்சைக்குரிய மாவிலாறு அணைக்கட்டை ஒட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இலங்கை அரசுப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வெடித்த கடும் சமர் நேற்றுமுன்தினம் முன்னிரவுடன் திடீரெனத் தணிவுற்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள தமிழ்ப் பொதுமக்களின் நிலைகள் மீது அரசுப் படைகள் விமானம் மூலமும், ஷெல், பீரங்கிகள் மூலமும் நேற்றுமுன்தினம் நடத்திய கொடூரத் தாக்குதலின் தீவிரமும் நேற்று ஒரேயடியாகக் குறைந்தது.

மாவிலாறு அணைக்கட்டின் கால்வாய்க் கதவுகள் அமைந்துள்ள பிரதேசத்தைக் கைப்பற்றும் இலக்குடன் இலங்கைப் படைகள் பெருத்த எடுப்பில் அங்கு இரு முனைகளில் இராணுவ நகர்வுகளை நேற்றுமுன்தினம் விடிகாலையில் ஆரம்பித்தமையும் -

நேற்றுமுன்தினம் முழு நாளும் அப்பிரதேசத்தில் கடும் சமர் இடம்பெற்றமையும் - தெரிந்தவையே.

நேற்று முன்தினம் முன்னிரவுடன் இந்த யுத்தம் திடீரென - ஆச்சரியம் தரத் தக்க விதத்தில் - ஒரேயடியாகத் தணிந்தது.

அரசு - புலிகள் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் களத்தில் இடம்பெற்ற மிக மோசமான சமர் இதுவேயென நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டையை இராணுவ விமர்சகர்கள் குறிப்பிட்டிருந்தனர். அந்தச் சமர் திடீரெனத் தணிந்தமை குறித்து பல தரப்பிலும் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை மூலம் கால்வாய்க் கதவு உள்ள இடத்துக்கு நெருக்கமாகப் படையினர் வந்துள்ள போதிலும், கால்வாய்க் கதவு அமைந்துள்ள இடம் இன்னமும் அரசுத் துருப்புகளின் கட்டுப்பாட்டில் வரவில்லை என்றே விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அப்படியிருக்கையில், அரசுப் படைகள் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை திடீரென மந்தமானது ஏன் என்று பல தரப்பிலும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இந்தப் படை நகர்வுக்கு, இராணுவத்தின் பின்வழங்கல் மையமாகவும், விநியோக நிலையமாகவும் இருந்த கந்தளாய், அல்லைப் படை முகாமின் பிரதான ஆயுதக் களஞ்சியம் நேற்று முன்தினம் திடீரென வெடித்துச் சிதறியமையை அடுத்து -

அல்லது -

நேற்றுமுன்தினம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்கள் மீது அரசுப் படைகள் வான் வழியாக மூர்க்கத்துடன் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் பேரழிவுகளைச் சந்தித்த நிலையில் அது தொடர்பாக இந்தியாவிடமிருந்து கடுங் குறிப்புடன் வந்த செய்தி ஒன்றை அடுத்து -

இந்தப் படை நகர்வின் தீவிரம் தணிக்கப்பட்டிருக்கலாம் எனக் கொழும்பில் சில செய்தி வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன. (உ)

## அச்சுவேலியில் இளைஞர் கொலை

யாழ்ப்பாணம்,ஓக.12

அச்சுவேலி கைத்தொழில்பேட்டை வீதியில் இனந்தெரியாதவர்களால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலி செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகுமார் (வயது - 26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அல்லையில் உள்ள கல்லுடைக்கும் தொழிற்சாலையில் பணிபுரியும் இவர் ஆலையில் கல்லுடைத்துவிட்டு உழவு இயந்திரத்தில் செல்வநாயகபுரத்திலுள்ள வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-203 - 11)

## ஷெல் தாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகரன் லிசிகரன் (வயது 13), ரகுசங்கர் சந்திரலேகா (வயது 24), கந்தசாமி செல்லம்மா (வயது 51) ஆகியோரே ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிக் காயம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## பளை, இயக்கச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பரந்தன் நோக்கி வந்தனர்.

இவர்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இடம்பெயர்ந்தோருக்கான உதவிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்து கொடுத்துள்ளது. (352)

## படை நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பான இடங்களுக்கு இடம்பெயரு மாறு புலிகள் அறிவித்துள்ளனர்.

அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், யாழ்.கோட்டை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேச மக்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு நேற்று நள்ளிரவு புலிகள் அறிவித்தனர்.

இந்த அறிவித்தலையடுத்து நேற்று மாலை இந்தப் பிரதேசங்களில் பெரும் பதற்றம் உருவாகியது. மக்கள் உடனடியாகவே இடம்பெயரத் தொடங்கினர் என்று அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

College of CHEMISTRY
THEORY PAPERS
By: DIAS B.Sc.(Hons)
32, பழம் Rd

## தாயகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் ஆரம்பித்த தாக்குதல் தொடர்பாக இளந்திரையன் நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக் குத் தெரிவித்ததாவது:-

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் மட்டக்களப்பு தரவைப் பகுதியிலே வான் படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி அங்கு ஒரு போர் அரங்கைத் திறந்திருந்தார்கள். அதேபோல இன்றுமாலை 5.45 மணியளவில் முகமாலை பகுதியிலே ஸ்ரீலங்கா அரச படைகள் பாரிய ஆட்லறி ஷெல் வீச்சுடன் ஒரு முன்நகர்வை மேற்கொண்டு புதிய அரங்கை அங்கும் திறந்தார்கள். அந்த அரங்கு இப்போது நாகர்கோயில்வரை வியாபித்திருக்கிறது.

இராணுவத்தினர் தமது நிலைகளிலிருந்து எமது முன்னரங்குகள் நோக்கி முன்னே வந்தார்கள். நாங்கள் திருப்பித் தாக்கினோம்; வலிமையாக அவர்களைத் தாக்கினோம். தொடர்ந்து சமர் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அரச படைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கிஞ்சித்தேனும் மதிக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரையில் எமது மக்களைப் பாதுகாப்பதற்காகவே போராடி வருகின்றோம்.

இராணுவத்தினர் எமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் நோக்கி எந்த முனைகளில் தாக்கினாலும் அந்த முனையில் பதிலடி கொடுக்கக்கூடிய தக்க ஆயுதங்களோடுதான் நாங்கள் இருக்கிறோம்.

எமது கட்டுப்பாட்டுப் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்காக சமராட வேண்டிய நிர்ப்பந்தம் எங்கள் மீது திணிக்கப்பட்டிருகிறது. அதைத்தான் நாங்கள் செய்து வருகிறோம் - என்றார் இளந்திரையன். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சின்னையா

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திருமதி பொன்னம்மா சின்னையா நேற்று அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் (வின்சர் தியேட்டர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (யாழ். மாநகர சபை), பத்மாவதி (கொழும்பு), பத்மநாதன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயும், கமலா (யாழ்ப்பாணம்), பாலசுந்தரம் (அறங்காவலர், கொட்டாஞ்சேனை வரதராச விநாயகர் ஆலயம், ஜபாஜி பிறதர்ஸ்), நிர்மலா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

35, மேபீல் றோட்,
கொட்டாஞ்சேனை.
தொ.பே.: 2473286

தகவல்:
பொன். பாலசுந்தரம்
(மருமகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org